It is a century and a half since Jane dressed, shopped, danced, lived and wrote. Since then many 'high brows' in literature have placed their wreaths of appreciation at her feet. The late Mr. Kipling almost gives her a place in the higher—perhaps the highest—realms of literature. Sir Walter Scott says that in her own sphere she is "most wonderful". Lord Macaulay and Mr. Goldwyn Smith among others have sung her praise. The qualities that have earned for her this chorus of praise from critics belonging to all schools are obvious even to a cursory reader of her works.

One feature that stands out boldly in all her novels is their realism. They are realistic in the sense that they reflect society in all honesty and truth without any exaggeration or suppression of fact. The scenes are usually English villages or little country towns and the events but ordinary occurrences in the work-a-day world. The characters chiefly reflect the middle class, the lower and the upper middle class, and are every way true to life. The Miss Bingleys and the Lady Catherines are characters too real to be forgotten. They are found every day and everywhere.

These characters make Jane's novels immortal. They never go, or can go, out of date. Her novels therefore are

in great demand and those that have the shaping of the young in their hands naturally never weary of prescribing her books in universities. This woman's view of human character is universal. The petty jealousies and scheming manœuvres of worldly-wise wives, the match-making, bride-groom-hunting activities of mothers and aunts and the systematic nets spread by young ladies to catch fashionable beaux are all painted with such truth, such circumstantial minuteness and such delicateness of irony that these women never suffer by comparison with the Becky Sharps and Blanche Amorys. "And when we compare the quarries from which those giants (Scott, Balzac, Dickens and others) fashioned their creations to the bits of ivory from which Jane Austen exquisitely carved her miniatures, well may we wonder how with material so attenuated she gave us so much." The Mary Crawfords, Miss Steels and Miss Bingleys are not absent from our women's hostels to-day. Are they? Nor for that matter are the Wickhams and Henry Crawfords (though not perhaps Darcies, Henry Tilneys and Edmund Bertrams) wholly unknown in men's hostels. It was said of Milton that "he could cut a Colossus out of a rock but not a miniature from a cherrystone." This could be reversed in J. Austen's case. She could sculpture a miniature in a cherrystone but not cut a Colossus from a rock.

The next point for consideration that presents itself is the society in which Jane Austen's men and women moved. And the question that naturally presents itself is whether or not this society has been made as immortal as the characters themselves. The answer is an emphatic affirmative. Jane Austen's society is a small one located as said already in villages and small country towns and reflecting in just and minute touches the life led by the middle classes. In Jane's opinion "the ordinary course of events in society with its conventions and restrictions is quite good enough for intelligent people". So no extraordinary event

is ever attempted—no romantic adventures, no escapades, no hair-breadth escapes, why, not even a balcony-scene and a rope-ladder. But in the presentation of these ordinary events she is an expert and to the lovers of conventions, society and humour, she is always a young blooming favourite. Her society is mainly composed of women shopping and visiting and dancing and giving parties. The flirting and husband-hunting young ladies go on through all seasons. Jane Austen's balls are as immortal as innumerable. Most of her plots develop complications, webs and cobwebs are woven and unwoven, love matches are effected as well as dissolved at card tables and conversations. And in the representation of these she is very true and never in the least cynical, the old maid that she was. But at the same time a slight irony and a pleasant humour at the expense of presuming wiseacres and noisy busybodies are not wanting. In fact the representation of these pleasant scenes is a great irony aimed at the empty and uneventful old maid's life of the authoress herself.

Talking of her uneventful life one is reminded of the events recorded in Miss Austen's novels. In general the events portrayed in them are as commonplace as her society and her characters. There is nothing out of the way or unnatural. Here and there an accidental meeting develops intimacy and love. Want of wealth often cancels engagements. The jealousy of a woman almost always becomes a barrier between the lover and his mistress. Elopements are recorded in plenty. Running away with the powdered footman or the driver of the coach-and-four would appear to have just come into fashion. In a word nothing but what every one knows and can understand is ever mentioned in our author's works. But this much must be said to Jane's credit: that here as elsewhere she is extremely fair as an authoress and leaves the fates of her heroes and heroines to be decided by their dispositions. Never once does she intervene (except perhaps in the sudden

discovery of Catherine Morland's advantageous position by General Tilney) in deciding the fates of her heroes and heroines.

A certain uniformity characterises all the events in Jane Austen's novels. They are as a rule happy occurrences; the author seems a stranger to pessimism. No death ever takes place throughout all the long years recorded by her novels; while happy weddings occur very often. Perhaps to this extent the true representation of life is not achieved. Jane Austen's vision seems one-sided. She is inclined to the optimistic side of life. But when her times and the kind of life that she led are taken into consideration this is perhaps excusable. Or probably she has done it all with some purpose. Or again it is perhaps the result of the extremely charitable disposition of the author; or maybe that in the eagerness to portray the cocketishness and the flippant snobbishness of society-butterflies and thereby indulge in a light victory at their expense, she forgot the pessimistic part of life. But this does not mean that her characters are incapable of suffering. On the other hand some of them are very serious and sensitive and gravity among them is contagious. Look at Elizabeth Bennet, and Eleanor Dashwood.

Jane Austen is never a favourite with the 'introvert man' as the philosophers call him. To the minds of those who believe with Dean Inge that "the imponderables are as real as the ponderables" she does not provide any food. As said before, the ordinary course of events is enough for an intelligent man in Jane Austen's opinion. But this does not appeal to the Indian to whom there are many things, besides the ordinary course of events in ordinary society, that go to make up life. Though no great love, no wrestling passion, no adamantine patriotism, no eternal love of truth is demanded of Jane Austen's characters, yet an inner motive guiding all, an account of something which is more real behind these ordinary scenes of life, and which

is as real and as important a factor as any other in a true reflection of life, is felt to be absent from her works.

She is blind to many of those noble things that make existence precious. She is too much of a materialist. Daughter to a parson as she was, she does not even refer to a God, or any reality behind the external world. She is not concerned with the victory of virtue over vice or of right over might. He that looks for poetic justice in her novels will look in vain. She does not even punish her villains. This may not be excusable in her but even here Jane Austen's advocates have their ready defence. They say that her attitude to the reader is essentially that of a friend, that of a host to guests, and never that of the patronising author who holds his readers so much in contempt as to make them listen to lessons. But it is precisely because her attitude to us is that of a friend that it is all the more necessary that she should give us something of those noble ideas that often in spite of ourselves fascinate our minds. After all balls and parties do not make the *summum bonum* of life. This is perhaps the reason for her unpopularity among the introvert species.

The novels of Jane Austen since they do not breathe of adventure and high romance suffer in the eyes of the adventurous young man, especially by the side of the creations of her contemporary 'bookmakers'. The simple peaceful life that is portrayed in all her novels, appeals generally only to those that have accustomed themselves to a stereotyped way of living and thinking. In spite of the obstacles thrown in by Wickham, Darcy's marriage with Elizabeth is stale and devoid of adventure. Lovers of romance call it insufferably dull.

Again the imaginative and intelligent reader is also to some extent disappointed. The novels do not stir the imagination nor are they provocative of thought. Hence the reaction of the mind to these novels is an algebraic nil. The

stories (and the characters even earlier than the stories) cease to haunt the reader after he finishes them. There are no Sybil Warners and Diana Vernons among the personæ; why, not even Hetty Sorrels and Eppie Marners. Even *during* the reading, the stories do not have that urging force which makes a reader more and more anxious to know the contents of the pages to come as he reads along. It is easy to read Jane Austen up to a particular chapter and then go about holiday-making and read the rest after a long interval. It might be said of Jane Austen's novels that they are pretty and little like Japanese women's feet. The praise unfortunately seems to end there.

E. G. VAIDYANATHAN,
IV B. Sc.

Books Reviewed

FROM MY KODAK

BY

MR. S. GOPALAN (TANJORE) 1936.

36 pp., as. 8.

THIS little volume consists of half a dozen well-drawn portraits. The subjects are well-known South Indians. The portraits are the products of great industry backed by genuine enthusiasm. The colours have been mixed with infinite care and knowledge of technique; the brush has been used with admirable skill.

We have searched the volume through for defects and confess that we have found none; except perhaps the fact (to use the author's own language) that in this "avowedly critical work there is little that is critical." But that is perhaps because the subjects chosen are above criticism. What could you say against the oratory or the sacrifice of the Rt. Hon'ble Sastri or the enthusiasm for knowledge of Mr. K. S. Ramaswami Sastrigal?

We warmly recommend the volume to all young men in the South country.

P. A. S.

SOCIETY REPORTS

The English Language & Literature Society

I TERM (1936–'37)

The society began its activities early in July '36. The following were the Office-bearers.

President:—Prof. M. S. Sundaram, M.A., B.Litt. (Oxon.)

Adviser:—Mr. S. Krishnamurti, M.A.

Secretary:—Mr. G. V. Padmanabhan, IV Class.

Chairman:—Mr. V. Krishnamurti, V Hons. (English.)

During this year the post of 'adviser' to the society was introduced for the first time in the annals of the society. The inaugural address of the society was delivered on 7-8-'36 in the sports pavilion, by Miss Sri Bur Kh. Mugaseth, M.A., B.Litt. (Oxon.) Prof. M. S. Sundaram presided. The subject of her address was "Liberty and Literature".

Two extraordinary and two ordinary meetings were held during the last term and the following subjects were discussed in the ordinary meetings.

(1) Browning's message.
(2) Wordsworth—the poet.

The first extraordinary meeting was addressed by Dr. James H. Cousins on "Some Aspects of Irish Revival". The second meeting was that of Mr. P. A. Subramania Iyer, M.A., on "G. K. Chesterton".

Mr. K. Srinivasan of IV Class was elected as the Chairman for the second term. The secretary thanks all those gentlemen who took an active part in the society for their co-operation in successfully working the society.

G. V. PADMANABHAN,
Secretary.

The History and Politics Society

President: Rao Saheb Prof. C. S. Srinivasachariar Avl., M.A.
Chairman: Mr. P. C. Srinivasan, V Hons. I Term.
Mr. S. Pr. Ramaswamy, V Hons. II Term.
Secretary: Mr. L. Lakshmi Pathy Sastry, IV Hons.

The Society began its work early in the first week of July. Seven meetings have been held till now out of which three were extraordinary.

In the first extraordinary meeting held on the 6th July 1936 a resolution was passed congratulating M.R.Ry. Dewan Bahadur Dr. S. Krishnaswamy Iyangar Avl., M.A., Hony. Ph.D., University Professor, Mysore and Madras (Retd.) on the conferment on him of the title 'Dewan Bahadur'.

In the second extraordinary meeting held on the 9th Nov. 1936 M.R.Ry. R. Suryanarayana Rao Garu, member of the Servants of India Society, addressed the house on "Some Stray Thoughts."

The inaugural address was delivered by Dr. M. H. Krishna, M.A., D.Litt. (Lond.), Professor of History, Mysore University and Director of Archaeology, Mysore State, on 25th July 1936. M.R.Ry. M. Venkata Rangayya Garu, M.A., Professor of History and Politics, Andhra University, Waltair, presided. The subject of the address was "Archaeology and History."

Four ordinary meetings were held and the following subjects were discussed:

1. "Socialism can alone cure the Political ills of India." Mr. S. Pr. Ramaswamy, V Hons.
2. "Democracy and Representative Government." Mr. N. Sivaprakasam, V Hons.
3. "Slavery." Mr. R. Srinivasan, V Hons.
4. "Whither Europe." Mr. V. Dandapani, V Hons.

L. LAKSHMI PATHY SASTRY,
Secretary.

Annamalai University Dramatic Club

III Term (1935–'36).

Our activities for this term began with "The Variety Entertainment". The various societies of the University contributed towards the success of the 'Variety'. The Telugu, Tamil and English farces were especially appreciated by the audience. The collections amounted to Rs. 106-0-0 which was transferred to the "Poor Boys Fund".

A new feature of the working of the Club this year was the arrangement of a Prize Distribution Function. M.R.Ry. S. K. Parthasarathy Iyengar Avl., District Munsif, Karur, was invited. He delivered an address on "Acting in Tamil Dramas," when our Vice-Chancellor presided. The lecturer gave away the medals to the successful actors of the year.

We are extremely thankful to the president for the keen enthusiasm he has evinced in the working of the Club. We are also very thankful to the Vice-President, Mr. C. R. Myleru who has always helped us in bringing the various functions of the Club to a successful termination and who has done his best to bring out the hidden histrionic talents of the students of the University.

We are also thankful to the members of the Dramatic Club for their encouragement shown to the Club by various means.

S. Nagarajan,
Secretary.

First Annamalainagar Rover Crew

Annual Report for 1935-'36.

T. P. Navanitakrishna	...	Rover Leader.
K. Venkata Rao	...	Asst. Rover Leader.
N. G. Vaidyanathan	...	Instructor.

T. N. Venkataraman	...	Senior Rover Mate and Scribe.
Chandrasekhara Rao	...	Librarian till 2nd Feb.
V. Ranganathan	...	„ from 6th Feb.
K. V. Subramanian	...	Camp Secretary.
G. Soundararajan	...	In charge of Den.

The Crew consists of 32 members divided into 6 Patrols. Of these 7 have been invested as Rover Scouts, 24 are Rover Squires undergoing their probation and 1 is a recruit.

The Crew had 22 general meetings during the year at which instruction was given and tests conducted in Knotting, Flag, Uses of the Staff, First Aid, Signalling, and Civics. The average attendance at these meetings was 19. Two parades at which troop formations and marching were practised, were conducted. There was also one general camp fire.

There were 6 camps during the year. 23 Members of the Crew with the Rover Leader attended the Rover Meet at Adyar from the 27th to 30th Dec. 1935. Rover Squire G. Soundararajan has completed the hike for the Ramblers' Badge on his cycle.

The Crew rendered help at the Convocation and at the dramatic performance on 1st Feb. 1936, by helping to preserve order. A few members of the Crew are teaching the Night School run by the Social Reform Club, and in the conduct of the Cub Pack attached to the local elementary school.

Out of the grant of Rs. 100/- by the University, Rs. 70 was spent in the purchase of a Patrol tent, Rs. 18/- towards week-end camps, and Rs. 12/- towards printing charges. Rs. 150/- was sanctioned and utilised for the expenses incurred in attending the Rover Meet.

The Crew thanks the Warden and the Sub-Warden for the facilities given for Rovers attending camp. The Crew

feels very grateful to the Vice-Chancellor for his great kindness, and renders its heartfelt thanks to him.

The 'Rover Day' was held on the 26th Feb. at 5 P.M. in the University Pavilion under the presidency of the Rt. Hon'ble V. S. Srinivasa Sastri, P.C., C.H. The Crew gave a demonstration of Camping. After the Annual Report was read, Mr. M. S. Sundaram (Professor of English, Annamalai University) gave an address to the Rovers, pointing out the various things that Rovers are expected to do in the amelioration of the life around them, and stressed the importance of unostentatious service. During the course of his presidential address, the Vice-Chancellor showed that the 'brotherhood' aspect of Scouting was of vital importance, and exhorted the Rovers to follow the path of non-retaliation.

Report for July–Sep. 1936

The Crew consists of 29 members divided into 7 Patrols.

There were 10 general meetings, 2 camp-fires, 2 Parades and 8 classes in the study of tests.

The crew went on camp 4 times during this period; 5 members have completed their hike for the Ramblers' badge.

The crew rendered help at the Founder's Day on Sep. 30. A few members are teaching in the Night School run by the Social Reform Club, and are running a Cub Pack for the boys of this school.

Annamalainagar,
26—2—1936.

T. N. VENKATARAMAN,
Senior Rover Mate.

செந்தமிழ்ச் சீர்மை

செந்தமிழென்னும் செல்வத்தாயின் செல்வப்புதல்வரில் ஒருவனாகிய தமியேன் எடுத்து நவில்வது, வீண் முயற்சியெனச் சொல்லினும் தகும். எனினும் தண்டமிழைத் தாய்மொழியாய்க் கொண்ட தனயன்யான் தாயின் பெருமையைப் புகல்வது தகுதியென நேர்ந்து எனது சிற்றறிவிற்கியன்ற அளவு சிறிது கூறுகின்றேன்.

தமிழின் பெருமையை எடுத்துரைக்கத் தருணம் நேர்ந்தது எனக்கு அளப்பிலா ஆனந்தத்தை யளிக்கின்றது. ஏனெனில் தமிழின் சேய்களாகிய யாம் ஒவ்வொருவரும் அன்னையின் பெருமையை அறிந்திருத்தல் அவசியம். பெருமையைக் கூறப் புகின், அவளுடைய எப்பருவத்திய பெருமையைச் சொல்வது.

"பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே இருந்து வைகை யேட்டிடைத் தவழ்ந்த பேதை
நெருப்பிலேநின்று சான்றோர் நினைவிலே யிருந்தோரென
மருப்பிலே பயின்றபாவை மருங்கிலே வளர்கின்றாளே."

தொண்டர் நாதனைத் தூதிடைவிடுத்ததும், முதலையுண்ட பாலனை அழைத்ததும், எலும்புபெண்ணுருவாக்கிக் கண்டதும் மறைக்கதவினைத் திறந்ததும் கன்னித் தண்டமிழலால் வேறு பாவையல்ல. இம்மட்டோ நம் பாஷையின் மகிமை.

இன்னும் தமிழ் மூதாதையராயிருக்கும் கம்பரும், ஒட்டக்கூத்தரும், ஔவை மூதாட்டியாரும் தமிழிலியற்றிய பல அற்புதங்களை உற்றுநோக்குவது இன்றியமையாதது. ஒட்டக்கூத்தர் தாம் ஈட்டியெழுபது பாடுமுன் சரஸ்வதி கடாக்ஷத்தால் சிரங்களை அவற்றின் முண்டங்களோடு போயொட்டும்படி செய்தார்.

மேலும் கலைவாணியின் அவதாரமே என்னும்படி, புகழ் பெற்றுத் தம்மின் மிக்காரும் தம்மை ஒப்பாருமே இலர் என்று இறுமாப்புப்பூண்டிருந்த பெருஞ்சங்கப் புலவர்களைக் கணத்தில்

தலைகவிழச்செய்து, பெண்பாலெனினும் பெருமையை ஓங்கிவள ரச்செய்து விண்ணுலகையும் வாட்டும் வெண்பாப்பாடும் திறம் பெற்ற ஔவைப்பிராட்டியானவள், மூவேந்தருக்கும் மரியாதை செய்ய முறியுண்ட பனையை உயிர்பெற்றுத் தழைத்துப் பூத்துக் காய்த்துப் பழம் தருகவெனச் செந்தமிழாற் பாடவே அப்பனை யும் அவ்வாறே செய்ததெனின் வேறு வியந்துபோற்றத்தக்க துளதோ! இப்பாடல்கள் வேறு எம்மொழியிலுள்ளன?

தம்கவியால் இன்பவூற்றைத்திறந்து தமிழ் மக்களாகிய நாம் அருந்தத்தந்த கவியரசராகிய கம்பர், இளம்பருவத்தில் குருவின் ஆணை தலைமேற்கொண்டு கம்பங்கொல்லையைக் கடிதுகாவல் புரியுங்கால் அங்குவந்து மேய்ந்த குதிரையின் உயிர் நீங்கவும் மீளவும் பாடினாரே! இம்மகிமை பொருந்திய பாக்கள் எத் தேயத்தன! சேரன்முன் தன் மானங்கெடுத்த அம்பட்டனின் குறும்பையடக்கச் சரஸ்வதி யந்தாதியால் தேவியை மாலைசூடி நிற்க, தேவியும் தன் காற்சிலம்பொன்றை ஈந்தனளே! என்ன தெய்வீகம்! செந்தமிழ்ச் செய்யுட்களுக்குத் தெய்வத்தையும் தாழச்செய்யும் வல்லமை உள்ளதன்றோ.

தமிழ்ப்பாவை அகஸ்தியர் நாவிலேபிறந்து ஆரியத்தின் மடியிலே வளர்ந்து, ஆந்திரம் முதலிய பாஷைகளின் தோழமை பெற்றுச் சங்கப்புலவரது நாவிலே சஞ்சரித்து, வித்துவான்க ளுடைய வாக்கிலே விளையாடித் திராவிடதேய முழுவதும் ஏகச் சக்ராதிபத்தியஞ் செலுத்திவந்தனள்.

மேலும் தமிழின் பெருமையை நன்குணர்ந்தவரும், மேல் நாட்டு ஜெகப்பிரியரும் நாண, நம் இனிய தமிழில் "மனோன் மணீயம்" என்ற மாபெரும் நாடகத்தமிழியற்றிய புலவரு மான ஸ்ரீமான் சுந்தரம் பிள்ளையவர்களைப் பின்பற்றி அன்ன வர் அன்னையாம் தமிழ்மங்கையைச் சிறப்பித்துள்ள பகுதியை எண்டெடுத்து நோக்குவாம்.

"நீள்கடலை ஆடையாய்க்கொண்ட புவித்தாய்க்கு,
அழகுபொருந்தியமுகமே நம் பாதகண்டமாகும்

அப்பரத கண்டத்தில் தெட்சிணமே அன்னவளின்
மதியைப்பழித்த நெற்றியாம். தெட்சிணத்திலேயே
சிறந்த நம் திராவிடமானது அந்நெற்றியில்
விளங்கும் வாசனைபொருந்திய பொட்டாம்.''

அப்பொட்டானது எத்திசையும் மணத்தை வீசுவது போன்று நம் தமிழணங்கும் எஞ்ஞான்றும் பரவிக் குடிகொண் டிருந்துளள்.

சகல உயிர்ப்பிராணிகளையும் இயற்றி அளித்து, அழித்துக் கழிக்கும் பரம்பொருள், தாமட்டும் நிலைதிரியாதிருப்பதுபோல், கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம் என்ற பல பாஷைகளும் தன்னிடமிருந்து பிறந்தனவெனினும், அதாவது பல குழந்தைகளைத் தான் பெற்றும், வடமொழியைப்போல் பேச்சு வழக்கற்றுது, தமிழ் மகள் இன்னும் தன்னுடைய இளமைப் பருவங் குன்றாதிருப்பது மிகவும் வியக்கத்தக்கதன்றோ.

நீர்க்கடல்கள் யாவையும் பருகிக் கரைகண்ட அகத்திய முனிவரே கல்விக்கடல்கடந்து கரைகாண இயலாது குமரக் கடவுளைக் குருவாகத்தேடிச் சென்றனரென்றால் நம் தமிழின் பரப்பை விளக்கமுடியுமோ?

செந்தமிழ்க்குன்றாய முருகனின் தந்தை பரமசிவனே ஒருக்கால் நக்கீரருடன் வாதஞ்செய்து ஒரு சொல்லுக்காக விழித்தாரென்றால், தமிழின் இலக்கணம் இவ்வனவினது என்றறையற்பாலதோ.

வைகையாற்றின் பெருவெள்ளத்திற் சம்பந்தரால் எறியப் பட்ட தமிழ்ப்பாவைக்கொண்ட ஏடு எதிர்நோக்கித் தவழ்ந்து கரையேறியதை உற்றுநோக்கின், எக்காலத்திலும் இளமைப் பருவத்தினளாயே இருப்பள் நம் தமிழ்த்தாய் என்பது நன்கு விளங்கும்.

முறுவல்கொண்டு முப்புரமெரித்த முக்கண்ணன் ஊழிக் காலத்தில் தனியே இருக்கும்பொழுது நேரப் போக்கிற்கு உதவுமென்றன்றோ மாணிக்கவாசகரின் திருவாசகம் என்னும்

தீந்தமிழ்ப் பிரதியொன்று எழுதி வைத்துக்கொண்டனராம். எந்நாட்டாரும் போற்றும் திருக்குறளாகிய தமிழ் நூலுக் கன்றோ சங்கப்பலகை இடங்கொடுத்தது.

எத்தேயத்தார்க்கும் எச்சமயத்தினர்க்கும் பொதுவாக உரைத்துப்போகும் தமிழ் நூலாகிய குறளை நன்குணர்ந்தோர் ஒவ்வொரு குலத்துக்கும் வெவ்வேறு சட்டம் சொல்லும் வட மொழி நூலாகிய மனுநீதியை அருகிலும் வைத்திருப்பரோ? மாட்டார் என்பது திண்ணம்.

திருவாசகத்திற்கு உருகாதான் ஒரு வாசகத்திற்கும் உரு கான் என்று சொல்லியவாறு, கன்னெஞ்சையும் கரைத்து முத் திக்கு வழிகாட்டி நிற்கும் திருவாசகமென்னும் தமிழ்த் தேனை வாய்மாந்திச் சுவைகண்டோர்கள், உருக்குமியல்பற்ற கனபாடம் ஜடபாட முதலியவற்றைக் கண்களை மூடிக்கொண்டு உருவேற்றி முழக்குவரோ? மாட்டாரென்பது தெளிவு.

நேயர்காள்! தமிழின் பெருமையை நன்குணர்ந்தோம். எனினும் தற்காலத்தில் தமிழ் கற்பதையே வேப்பங்கஷாயம் பருகுவது போன்றும், தமிழ்ப் புத்தகத்தை எடுப்பதையே நாகப்புற்றில் கையிடுவதுபோன்றும், தான் ஒரு தமிழன் என்று சொல்லிக்கொள்வதே தீரா அபகீர்த்தி என்றும் தீர்க்கா லோசனையற்ற சிலர் செப்பித்திரிகின்றனர். தமிழில் தம் பெயரும் எழுதத்தெரியாதிருப்பதே மேன்மையெனக் கருது வாரும் உளர். அவர்களே அறிவாளர்கள்!

தாய்ப் பாஷை கற்காமல் பிறபாஷை பயில எண்ணுவோர் கள், தாயிருக்க மனையை நீராட்டுவார்போல்வர். தன் தாய்ப் பாஷையையே கற்க இயலாதவன் வேறு எப்பாஷையைத் தான் கசடறக் கற்றுவிடுவன்?

பல ஆண்டுகளுக்கு முன்னர்ப் பாண்டியநாட்டைச் செங் கோலோச்சிவந்த பாண்டியனொருவன் தன் சமஸ்தானக் கவி வாணர்களையும், சங்கப்புலவர் முதலிய பூர்ண பாண்டித்யம்பெற்ற பண்டிதர்களையும் அவர்களுடைய கல்வித்திறன் அறியுமாறு மாற்

றுயர்ந்த செம்பொன்னுல் கனமான கொலுசுகள் செய்வித்து அவற்றிற்படியுமாறு ஓர் தங்கப் பலகையமைத்து, அதன்மேல் நவரத்தின மணிகளைக் குவியலாகக்குவித்து "இந்த நாலு கொலுசுகளும் அற்று விழும்படி குறிப்பிட்ட தினத்தில் யாராயினும் ஒருவர் பாடுவாராயின் அவர்க்குத் தகுந்த மரியாதையுடன் சன்மானம் செய்யலாகும்" என்று பறை சாற்றுவித்தனன். மேற்கூறிய செய்தி ஊரெங்கும் பரவலாயிற்று. லெட்சக் கணக்கான வித்வ சிரோமணிகள் வந்துகூடினர். ஆனுல் எவரும் முன்வந்து அரசன் ஆக்ஞையைப் பூர்த்திசெய்விக்க அஞ்சினர். அத்தருணம் தற்செயலாய் வந்த நம் ஔவையார் கோரியபடி செய்வதாக வாக்குறுதி செய்து சில செய்யுட்கள் பாடி ஒவ்வொரு சங்கிலியாக நாலும் அற்று விழும்படி செய்தாள்.

அம்மம்ம! நேயர்காள்! என்ன அற்புதம்! இத்தெய்வீகமான செய்யுட்கள் எப்பாஷையிலுள்ளன? எத்தேசத்தில்? யாருக்குச் சொந்தம்? அனுதிகாலம் தொடங்கி ஆதியும், பிறப்பும், தனக்கு ஒப்பும் உயர்வுமில்லாமல், தொல்லரசராலும் உலகத்தவராலும் புகழ்ந்து கொண்டாடப்பட்டு வந்தது செந்தமிழ்ப் பாஷையன்றே. மகிமை பொருந்திய இந்தியாவல்லவோ அதன் பிறப்பிடம். வளர்ந்தவிடம். வளருமிடம். ஆதலின் இந்தியாவிற்குச் சொந்தமும், அவள் அருமை மக்களாகிய நமக்குச் சர்வ சொந்தமுமல்லவா?

"சிந்தாமணியின் நந்தாப் பொருண்மையும்
மணிமேகலையின் அணிகெழு போக்கும்
சிலப்பதிகாரத்திலக்கியச் செலவும்
திருவள்ளுவரின் ஒருமொழி நயமும்
கம்பன் கவியின் செம்பொருளின்பமும்,
பத்துப்பாட்டின் வித்தகநடையும்
கல்லாடத்தின் எல்லாச் சிறப்பும்
இன்னோரன்ன பன்னூன் மாண்பும்
பல்லூழிகாலம் பாடுகிடப்பினும்
வருமோ மற்றோர் வாக்கின் வழித்தாய்?"

ஏ! தமிழ்நங்காய்? நம் நாட்டுச் சிறார்கள் மாற்றாளாகிய ஆங்கில மங்கையை விரும்புவதெல்லாம் உத்தியோக பதவியை அடையவேண்டுமென்றேயன்றி நின்னினுஞ் சிறந்த சொற்பொருணயம் அங்குண்டென்று நினைத்தல்ல. ஆதலின் அவர்கள்பால் உனக்கு வெறுப்புத்தோன்ற நியாயமில்லை. அன்னாய்? நின்சிறாரை மனப்பூர்வமாக ஆசிர்வதிப்பாயாக. தாழ்ந்தோருயர்வதும் உயர்ந்தோர் தாழ்வதும் கால வேற்றுமையானே. ஆகையால் நீயும் அத்தகைய காலபேதத்தின்பாற்பட்டனை. 'குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர் நடையெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்" அன்றோ. வீணே கழிவிரக்கங் கொள்வதிற் பயனில்லை. ஓ தமிழணங்கே! நீ இந்நிலைமையினின்றும் நன்னிலைமை பெறவேண்டுமாயின் நின் பண்டித இரத்தினங்கள் கால வியல்பிற்கேற்ற கடமைகளைச் செய்து நிறைவேற்றவேண்டும்.

ஆதலால் காலரீதிக்கேற்ற கடமைகளை யூகித்துணர்ந்து ஜனன சகோதர சகோதரிகளுக்கும் நமது பாஷைக்கும் கண்ணியத்தை உண்டாக்கும் புண்ணியத்தைக் கையாளும்படி கருணைநிதியைப் பிரார்த்திப்போமாக. தெய்வத்தினிடமிருந்து தோன்றிய தமிழை—நம் தாய்க்கொப்பான தமிழை—தவஞ் செய்தும் அடைதற்கரிய தமிழைத்—தாழ்மைப்படுத்தாமல் இருத்தலே மேன்மை. தேசாபிமானம், மதாபிமானம் முதலியவற்றோடு பாஷாபிமானிகளாயும் இருப்பதுதான் அறிவுடையோர்க்கழகு. எவனும் அறிவுடையவனாயிருக்க முயலுவனேயன்றி அறிவீனனாயிருக்க நினையான் என்பது அங்கை நெல்லிக்கனிபோல் விளங்குவதாகும். பெருமையுற விரும்புவரே யன்றிச் சிறுமையுறச் சம்மதியார். நாமும் நம் தேசம் க்ஷேமமடைய வேண்டுமாயின் நம் பாஷையாகிய செந்தமிழைச் சீராட்டிப் போற்றிப் பெருமைப்படுத்தினால் அவளது சீர்மை நன்கு விளங்குவதோடு நாமும் கடவுளால் மேலான நிலைமைக்குக் கொண்டுவரப்படுவோமென்பது திண்ணம்.

C. BALASUBRAMANIAN,
IV Hons. (Chem.)

நாரீமணி

I

என் அன்பிற்குரிய தோழியாகிய உன்னிடத்து என் கதையைக் கூருது வேறு யாரிடம் கூறப்போகிறேன். என் சரிதத்தைக் கேட்டபிறகாவது என்போன்ற அபாக்கியவதிக ளான பெண்கள் சுகமுற வாழ்வதற்கு வேண்டியவைகளைச் செய்.

நான் என் தகப்பனாது இரண்டாவது தாரத்தின் இரண் டாவது புத்ரி. என் தந்தை என் தாயை மணந்தபோது அவருக்கு வயது 50. அவர்களுடைய முதல் மனைவியின் புதல் வர்களும், புதல்விகளும் ஏதோ மனஸ்தாபத்தினல் என் தகப்ப னைத் திரும்பியும் பார்ப்பது கிடையாது. நாங்களோ மிகுந்த ஏழைகள். என் தகப்பனார் பல வீடுகளில் சென்று இராமா யணம் வாசித்தும், 'ஆராதனம்' செய்தும், பல சிறுவர்களுக் குச் சமஸ்கிருதம் கற்றுக்கொடுத்தும் பணம் ஈட்டிவருவது வழக்கம். அப்படியிருக்க, திடீரென்று, எனது சகோதரி பெரி யம்மையின் வாய்க்குட்பட்டு உயிர் நீத்தாள். எஞ்சிநின்ற என்னை என் தகப்பனார் விழிகளை இமைகாப்பதுபோலப் பாது காத்து வந்தார். நானும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து மங்கைப்பருவத்தை அடைந்தேன்.

இதிலிருந்து ஆரம்பித்தது என் துன்பமும். பெண்கள் எப்படிப்பட்ட கணவனை விரும்புவார்கள்? கல்வி வாசனையே இல்லாமலிருப்பினும், எழில்மிக்கோனும் நற்குணமுடையவனு மாகிய ஒரு புருடனை விரும்பினேன் நான். என் தகப்பனாரோ வயது முதிர்ந்தோனாயிருப்பினும், கல்வி அறிவு கேள்விகளிற் சிறந்த ஒருவனுக்கு என்னை மணம்செய்விக்கக் கருதினர். ஆனால் என் தாயோ, ஆடவன் எப்படிப்பட்டவனாகவிருப்பினும்— நொண்டியோ, குருடோ, முடமோ, கிழமோ இவை ஒன்றும் பாதகமில்லை—செல்வமுடைய சிறந்த பணக்காரன் ஒருவனுக்கு

வதுவைசெய்ய நாடினாள். இரண்டாந்தாரமும், இளமனைவியுமாகிய என் தாயின் வாக்கினை எதிர்த்தும் என் தந்தையால் பேசமுடியுமா? ஆகவே என் தந்தை தான் கொணர்ந்த நல்ல ஜாதகங்களை எல்லாம் புறத்தே தள்ளி, மாப்பிள்ளை கொணரச் சென்னை சென்றார்.

அங்கு ஒரு மாப்பிள்ளை கிடைத்ததாம். அவர் மிக்க எழில்வாய்ந்த பதினெட்டு வயதிற்கு மேற்படாத சிறுவராம். சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜில் 'ஹானர்ஸ்' வகுப்பில் படித்துக்கொண்டிருந்தாராம். அவரையும் அவர் பெற்றோர்களையும் கண்டுபேசியதில் ஐயாயிரம் ரூபாய் ரொக்கமாகக் கையிற் கொடுப்பதாகவிருந்தால், பெண்ணைப்பார்த்து மனதிற்குப் பிடித்தமானால் மணத்தைப்பற்றி ஆலோசிக்கிறோம் என்றார்களாம். அச்சிறுவர் தலைகுனிந்தவாறே அப்பாற் சென்றுவிட்டாராம். இவ்வரதக்ஷிணை என்றுதான் தொலையுமோ. ஒருசெல்வியுமற்ற என் தகப்பனார், அவர்களைத் திரும்பிக்கூடப் பாராது செல்வச்செருக்கால், தம் கோலத்தைக்கண்டு சிரித்ததையும் பொருட்படுத்தாது காஞ்சீபுரம் சென்றார். அங்கு ஒரு வரன் கிடைத்தது. அப்புருடருக்கு வயது 40. வேலை மணியம், ஐவேஜா உண்டாம். முதல் மனைவி தவறிவிட்டாளாம். அப்புருடருக்கு என்னைப் பேசிவிட்டு வந்துவிட்டார். என் தாய் முதலில் சற்று சம்மதிக்காவிட்டாலும், பிறகு ஐவேஜாக்காரர் என்று கூறியவுடன் சந்தோஷமாகச் சம்மதம் கொடுத்துவிட்டாள். மணமும் நடந்தேறியது. என்னையும் உடன் அழைத்துப் போனார்கள். அப்பொழுது எனக்கு வயது 9. ஒன்பதே வயதுள்ள என்னைக் கிணற்றில் தள்ளுவதுபோல என்னைப் பெற்றெடுத்த தாயும் தந்தையுமே என் வயதைக்காட்டிலும் நான்கு ஐந்து மடங்கு அதிகம் உள்ள ஒருவருக்கு மணம் செய்து கொடுத்திருக்கும்போது பிறரை நோவதினாற் பயனென்ன? கிளிப்பிள்ளையை வளர்த்துப் பூனைக்கு பலிகொடுப்பார்போல இதுகாறும் என்னை அன்பாக வளர்த்துப் 'பெண்நோயுடையவனும்' கடனாளியுமான ஒருவனுக்கா பலியிட வேண்டும்.

நான் முன்செென்மத்திற் செய்த ஊழ்வினையின் பயனாகவோ அல்லது இச்செென்மத்தில் நான் இதுகாறும் செய்த தீவினைப் பயனாகவோ, என் கணவர் உயிர்நீத்தார். என் மணக்கோலமும் விதவைக்கோலமாக முடிந்து, நான் வீடு திரும்பினேன். என் கணவனை இழந்து என் தாய்வீடு திரும்பியது எனக்கு எல்லையற்ற அகமகிழ்ச்சியை உண்டாக்கியது. ஏனென்றால் முதலில் அவரைக் கண்டாலே எனக்குப் பிடிக்கவில்லை. இரண்டாவது பருத்த அவரது தொந்தியும், வயதும் எனக்கு ஒருவித அச்சத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தது. அதுவுமன்றி அவ்வீட்டில் உள்ளவர்கள் பேசுகின்ற பேச்சுக்களும் அவர்களது நடத்தையும் வெறுப்பையளித்தன.

நான் விதவையாக வீடுவந்த பிறகு என் தகப்பனார் வெகுநாள் உயிர்வாழவில்லை. தனது ஒரே பெண்ணை, வெகு சிரமப்பட்டுத் தேடி ஒரு புருடனுக்கு மணஞ்செய்வித்துச் சந்தோஷகரமாக வாழட்டும் என்று இவ்விதமாகச் செய்திருக்க, அவள் ஒன்பது வயதிலேயே அறுத்து வீடுவந்துவிட்டாள் என்றால் அது அதிக வருத்தந்தராதா? அவ்வருத்தத்தினாலே அவரும் உயிர்நீத்தார்.

நான் அப்பொழுது சிறுபெண்ணாகவிருந்தபடியினால் அவர்களிருவரும் இறந்ததற்கு அவ்வளவாக வருந்தவில்லை. என் தகப்பனாரைமட்டும் அடிக்கடி நினைத்து அழுவது உண்டு. ஆனால் மற்றொருவரை ஒருவேளையும் சிந்தித்ததே கிடையாது.

இவ்விதமாக வளர்ந்து நான் எனது 14-வது வயதை அடைந்தேன். அப்பொழுதுதான் மணம் என்பது என்ன, காதல் என்பது என்ன, நாயகன் அல்லது கணவன் என்றால் யார் என இதுபோன்றவைகள் எல்லாம் விளங்கின. அப்பொழுதுதான் நான் விதவை என்பதின் பொருளையும் அறிந்தேன். எவ்வளவு அரற்றினேன் தெரியுமா. எனினும் மாண்டார் மீளுவாரோ? நான் இவ்விதமாக எவ்வளவு காலம் உண்டு

வாழ்வது. என் தாயும் கண்மூடிவிட்டால் பிறகு எனக்குக் கதி யார்? ஆகவே அச்சமயத்து இன்றியமையாத ஊன்றுகோலாக விருந்து தாக்கிவிடுகின்ற அக்கல்விச் செல்வத்தைப் பெற விரும்பினேன்.

என் தாயும், அவளது சுற்றமும் இதைக்கேட்டவுடன் மிகக் கோபங்கொண்டார்கள். ஒரு பெண், அதுவும் ஒரு விதவை வீட்டிலே ஒரு மூலையில் உட்கார்ந்து 'கிருஷ்ணா ராமா' என்று சொல்லி, இருக்கிற நாட்களை கழித்துவிட்டுப்போகாமல் படிப்பாம் படிப்பு. காரியம் வரவர மிஞ்சிப்போகிறதே. இவளுக்கு முடியிறக்கிவிடவேண்டும் (மொட்டையடித்துவிடவேண்டும்) என்றெல்லாம் பேசித் துப்பிக் கரித்தார்கள். என்ன! கல்வி கற்க விரும்பினால் பெண்கள் கற்கக்கூடாதா? புருடர்கள்மட்டுந்தானா கற்றல்வேண்டும். கல்வித்தெய்வம் ஆணா பெண்ணா? அப்படிப் பெண்கள் கற்றாலும் கன்னிப் பெண்களும், கணவனுடன் இல்லறம் நடாத்திவரும் பெண்களுந்தானா கற்றல்வேண்டும்? அவர்கள் முன்செய்திட்ட ஊழின் பயனைச் சுகத்தைத்தான் அடையமுடியாமல் இருக்கிறார்கள். அவர்கள் இந்தக் கல்வியின்பத்தையாவது நுகரக்கூடாதா? ஈசா என்னே இவ்வுலக மக்களின் மூடத்தன்மை?

II

* * * *

நான் சாரதா வித்யாலயத்துச் சேர்ந்து ஆறு வருடங்களுக்குப்பிறகு, ஒருநாள் வித்யாலயத்துத் தலைவி எங்களை எல்லாம் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களால் நடிக்கப்பெற்ற "லீலாவதி சுலோசனை" என்னும் நாடகத்துக்கு அழைத்துச் சென்றிருந்தாள். லீலாவதி ஆள்களிடத்துத் தன் தங்கை சுலோசனையைக் கொண்டுவிடக் கூறுகின்ற பகுதி வரும்போது என்மேல் ஏதோ பொத்தென்று விழுந்து கடித்தது. மறுகிமிடம் ஒரு பாம்பு ஒன்று ஓடியது. "ஐயோ என்னைப் பாம்பு கடித்துவிட்டது" என்று கூக்குரலிட்டு மூர்ச்சையானேன்.

III

*   *   *   *

கண்விழித்துப் பார்க்கும்போது ஒரு ஸோபாவில் கிடத்தப்பட்டிருந்தேன். எனக்குப் பக்கத்தில் ஒரு யௌவன புருடர் உட்கார்ந்து படித்துக்கொண்டிருந்தார். அவர் படித்துக்கொண்டிருந்ததாகத் தோன்றியதே தவிர என்மீதே தன் நாட்டத்தைச் செலுத்தியிருந்தார். நான் கண்விழித்ததைப் பார்த்ததும், அவர் என் தலையைச்சற்று உயர்த்தித் தன் தொடைமீது வைத்துக் கொண்டு "நாரீமணி, இப்பொழுது உடம்பு எப்படியிருக்கிறது? இனிமேல் நீ பயப்படவேண்டியதே இல்லை. சற்று சோடா சாப்பிடு" என்று கூறியபடி சோடா கொண்ட 'கிளாஸ்' டம்ளரை என் வாயில் வைத்தார்.

நான் அந்நியன் ஒருவன் மடிமீது தலைவைத்திருப்பது கண்டு கூச்சமும், அவர் எனது பழைய பெயரான நாரீமணி என்று கூப்பிட்டதைக் கேட்டு ஆச்சர்யமும், அச்சமும்; விதவையாயும், எதற்கும் அருகற்றவளுமாகிய என்னை இவ்வளவு அன்புடனும் ஆதரவுடனும் உபசரிப்பதைக்கண்டு திக்பிரமையும்கொண்டு பதில்கூறமாட்டாது வாய்மூடிக்கொண்டிருந்தேன். அவர் "நாரீமணி, நீ என்னை மன்னிப்பாயா? என் தாய் தந்தையர்களின் கட்டளைக்குப்பயந்து, அன்று உன் தகப்பனார் வந்து கேட்டபோது வாய் மூடிக்கொண்டிருந்துவிட்டேன். உன் தகப்பனார் சென்றபிறகு எவ்வளவு வருந்தினேன் தெரியுமா? எனது நண்பனாகிய இராமச்சந்திரன், நீங்களிருந்த வீட்டிற்கு நான்காவது வீட்டிலிருப்பவன். அவன் உன் அழகைப்பற்றியும் உன் உயர்ந்த குணத்தைப்பற்றியும் என்னிடம் வெகுவாகப் புகழ்ந்து கூறியதுமன்றி உனது முகத்தையும் 'கை காமிரா' வினால் பிடித்துத் தந்திருக்கிறான். அப்புறம் உன்னை நேரில் கண்டு பேசவேண்டுமென்று ஒருமுறை வந்தேன். அப்பொழுது நான் என்ன கேள்வியுற்றேன். உனது கல்யாணத்தைப்பற்றியும், நீ விதவையாக வீடு திரும்பியதைப்பற்றியுந்தான். விதவையாகிவிட்ட உன்னை உன் பிதா எனக்கு மணம்

செய்விக்கமாட்டார். அதுவுமன்றி ஊரில் உள்ளவர்கள் தூற்றுவார்கள் அல்லவா? இவ்விரண்டு முட்டுகள் தடையாக நிற்பதுகண்டு திரும்பிவிட்டேன். ஆனால் உன்னைப்பற்றிய நினைவுமட்டும் மனதைவிட்டு அகலவேயில்லை. நேற்றையதினம் நான் வக்கீல் சிவசுவாமி அய்யருடன் பேசிக்கொண்டிருக்கும் போதுதான் உன் தகப்பனார் மரணத்தைப்பற்றியும், நாடகக் கொட்டகையில் உனக்கு ஏற்பட்ட விபத்தைப்பற்றியும் அறிந்தேன். உடனே 'ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு' ச்சென்று 'உறவு முறை' கூறி உன்னை இங்கு கொணர்ந்தேன். கண்மணி என்னைப் பார்—அப்பாவும் உன்னை மணந்துகொள்ள உத்தரவு கொடுத்து விட்டார். நாம் மணம் செய்துகொண்டு திண்டிவனத்திற்குப் போய்விடலாம். அங்கு என்னை சப்கலெக்டராகப் போட்டு இருக்கிறார்கள்" என்று கூறியபடி, என் உத்தரவை எதிர்பாரா மலும், ஏதோ சுதந்திரம் உள்ளவர்போலும் முத்தமிட்டார். இப்படிப்பட்ட துஷ்டரிடத்து வாய்பேசாது இருந்துவிடுவதைக் காட்டிலும் சிறந்தது. . . . .

IV

*　　*　　*　　*

என்மீது என் குழந்தை ரங்கநாத் விழ, திடுக்கிட்டு எழுந்தேன். என்முன் அவன் தன் சிறு பல்லெல்லாம் தெரியக் காட்டிக் கொஞ்சி "அப்புச்சி அம்மா, அப்புச்சி" என்றான். அப்பொழுதுதான் நான் கண்டது கனவு என்றும், இவைகள் எல்லாம் சுமார் 12 மணியிலிருந்து 1 மணிக்குள் நடந்தேறியிருக்கிறது என்றும் அறிந்து எழுந்தேன். இதைப்படித்து நீங்கள் என்ன என்ன தெரிந்துகொள்ளலாமோ அவ்வளவையுந் தெரிந்துகொண்டு அவைகளைச் செயல்களிலும் காண்பியுங்கள்!

ஓம் தத் ஸத்.

S. S. Vasan,
IV B. Sc.

மாயப்பக்ஷி மறைந்தோடிப்போயிற்று

எங்கள் ஊர் கொசுவுக்கும், செம்மண் புழுதிக்கும் மிகவும் பேர்போனது. அதுவும் தற்காலத்தில், மோட்டார்வண்டிகள் அதிகமாக உபயோகப்படுத்தப்படுவதால் தெருக்களிலுள்ள மண்ணைப் பாதசாரிகளின் கண், முகம் தேகமெல்லாம் படியச் செய்து கஷ்டத்தைக் கொடுத்துக்கொண்டு வருகின்றன. மற்றப்படி, எங்கள் மனதைக் கவர்ந்து ஒருவிதமான எழுச்சியையும் கிளர்ச்சியையும் உண்டாக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படுவது கிடையாது. இந்தக் காரணங்களினுல் எங்களுக்கு வாழ்க்கை சந்தோஷமானதாக இல்லை. முனிசிபல் தேர்தல் சமயங்களில் நாங்கள் ஊக்கத்துடனும் ஆர்வத்துடனும் ஊர் நடவடிக்கைகளைப்பற்றிப் பேசுவதுண்டு. இந்தமாதிரி தேர்தல்களில் கக்ஷிகள் பலவாகப் பிரிவது சர்வ சாதாரணம். எங்கள் ஊர் அதற்கு விலக்கல்ல. ராஜசேகர முதலியார் 8000 ரூபாய் செலவு செய்து தோற்றுப்போனுர்; கோவணாண்டியானுர்; இரத்தினசாமி கவுண்டர் அதைவிடச் செலவழித்து வெற்றியடைந்து பதவியிலமர்ந்தார்; பிறகு அவரும் அதோகதியானுர்; அவர் இவரை எப்படி அவமானப்படுத்தினுர், இவர் அவரை என்ன வைதார் என்று இப்படியெல்லாம் அந்த சமயங்களில் பேசி நாங்கள் சிறிது காலம் போக்குவோம். மற்றபடி ஊர் தூங்குவது போலவே யிருக்கும்.

அப்படியிருக்கின்ற காலத்திலே மிஸ்டர் கோபாலன் என்பவர் ஒருவர் வந்தார். அவருக்கு மின்சார விளக்கு போடும் ஆபீசில் உயர்ந்த வேலை. சம்பளம் 250 ரூபாய். அவருடன் அவருடைய "லவ்"வும் (காதலி) வந்தாள். அவளை யார் பார்த்தாலும் அவள் ஒரு நவநாகரீக மங்கையென்று சொல்லுவார்கள். உண்மையில் அவள் அப்படியே. மிஸ்டர் கோபாலனே, நல்ல அழகும் கம்பீரத் தோற்றமும் வாய்ந்தவர். அவரும் ஒரு நாகரீக புருஷரே. சமூகம், ஜாதி, மதம் இதுவிஷயங்

களில் தற்கால நாகரீகத்திற்கேற்ப விநோதமான அபிப்பிராயங்களையுடையவர். ஜாதி இரண்டொழிய—அதாவது ஆண், பெண் தவிர—வேறு வித்தியாசம் மக்களுள் கிடையாதெனக் கொண்டவர். பழக்க வழக்கங்களிலும் அப்படியே. அவர் ஒரு ஹிந்து; ஆனால் ஹிந்துக்களைப்போல் காணப்படுவதோ, அவர்களைப்போல் செய்கைகளில் நடந்துகொள்வதோ இவைகளெல்லாம் தன்னுடைய கௌரவத்திற்கும், நாகரீகத்திற்கும் குறைவு என்று நினைப்பவர். இதனால் அவர், சாந்தகுணம் நிறைந்த வைதீகத்தன்மை வாய்ந்த ஒரு பிராமணனின் புதல்வனாயிருந்த போதிலும், நெற்றியில் விபூதி முதலியவை தரிப்பதை விடுத்து தலையை (கேசத்தை) வெட்டிவிட்டுக்கொண்டு, கால்மீசையும் (கரையான் மீசை என்றும் சொல்லுவார்கள்) வைத்துக்கொண்டிருந்தார். ஒரு தொப்பியும் அணிந்துகொண்டார். மற்றபடி, நிஜார், சட்டை, பூட்ஸ் இத்யாதி அங்கிகள், அணிகளெல்லாம் உண்டு. இப்படியிருந்ததினால் அவரை இந்துமதப் பிராமணர் என்று ஒருவரும் சொல்லமுடியாது. நான், எனக்குள், நாம் துப்பறிபவனாக ஏற்பட்டால் அவர்மாதிரி உருமாறி யாரும் என்னைக் கண்டுபிடிக்கமுடியாத நிலைமையில் அபூர்வ வேலைகள் செய்யலாம் என்று நினைப்பது வழக்கம். நீங்களும் அவரைப் பார்த்தால் அப்படியே நினைக்காமலிருக்கமுடியாது. ஏனென்றால் அவர் உடுப்புகளை மாற்றி மாற்றி அணிந்துகொண்டு வேளைக்கொரு மாதிரியாகக் காக்ஷியளிப்பார்.

இன்னொரு கவனிக்கத்தக்க விஷயம் என்னவென்றால், அவருக்கு சாதாரணமாக நாம் சாப்பிடும் சாம்பார், பொடித்தூவல், கூட்டு இவைகள் ஒன்றும் பிடியாது. கைபடாமல், தகரடப்பிகளில் அடைத்து வரும் சாமான்களையே தன் கையால் கூடத் தொடாமல் சாப்பிடுவார். பூணூல் போட்டுக்கொள்வது, தர்ப்பணம் செய்வது என்கிற பழக்கங்களுக்கும் அவருக்கும் வெகு தூரம். இராக்காலங்களில்தான் அவர் ஸ்நானம் செய்வது வழக்கம். அவசர சமயங்களில் ஸ்நானத்திற்கு முன்னது பின்னதாக க்ஷவரமும் (சுயமாக) செய்துகொள்வதுண்டு.

ஒரு சின்ன விஷயம். மிஸ்டர் கோபாலன் பிராமண குலத்திற் பிறந்தவன் என்று சொல்லிவிட்டேன். அவர் சம்ஸாரம் நாயுடு ஜாதியைச் சேர்ந்தவள். தற்கால நாகரீகத்தை யறிந்த இதை வாசிக்கும் எனது நண்பர்கள் இதனைப் பெரிதாக நினைக்கக்கூடாது. இருவரும் நாகரீக வாழ்க்கையில் முதிர்ந்த தேர்ச்சி யடைந்தவர்கள் ; ஒருவருக்கொருவர் மிகப் பொருத்தம்.

கோபாலன் காதலைக் கொள்ளைகொண்டவளும் அவனை மயக்கித் தன் மாயவலையில் விழச்செய்தவளும் ஆன சகுந்தலா (அதுதான் அவள் பெயர்) தளுக்கு மினுக்கு நிரம்ப உடையவள் ; அபூர்வமான ஆடைகளை உபயோகிப்பவள். வயது இருபது தான். நாம் சில நவீனங்களில் ஸ்திரீ வர்ணனைகளைப் படிக்கும் பொழுது, இத்தகைய நங்கையைப் பார்ப்பதரிதென்று நினைப்பது சகஜம். சகுந்தலா அத்தகைய வர்ணனைகளுக் கொத்தவாறிருந்தாள். இத்துடன் அவள் மிகவும் துணிச்சல் வாய்ந்தவள். மோட்டார் ஓட்டுவாள் ; டென்னிஸ் ஆடுவாள். அவள் பார்வை இதர மனிதர்மேல் விழுந்தால் அவர்களுக்கு அதியாச்சர்யத்தையும் கிறுகிறுப்பையும் உண்டாக்கும் தன்மை வாய்ந்தது.

இம்மாதிரியான நவநாகரீக மங்கையுடன் நம் கோபாலன் வாழ்க்கை நடத்தினாலும் அக்னி சாக்ஷியாக மணந்த மனைவி ஒருத்தி உயிரோடிருந்தாள். இந்தவிடத்தில் கூறவேண்டியதென்னவென்றால் நம் கோபாலன் இந்த நங்கையை முதன் முதல் மதராஸ் கடற்கரையில் ஸ்நேகம் பிடித்தபொழுது அக்னிதான் கோபாலனின் இரண்டு விரல்களுக்கு மத்தியில் சாக்ஷியிருந்தார் என்பதாகும். கோபாலன் முதலில் தாலிகட்டிக் கலியாணம் செய்துகொண்ட பெண் நல்ல அழகுவாய்ந்தவள் தான். ஆனால் நாகரீகத்தில் கோபாலனைப்போல் அவ்வளவு போதாது. அவள் குடும்பப்பெண்தான் ; சினிமா "ஸ்டார்" அல்ல ; அவள் ஒரு தாசில்தார் மகள். அவர் தன் மகள் கல்யாணியை 4000 ரூபாய் வரதக்ஷிணையுடன் கோபாலனுக்குக் கொடுத்தார். பணத்தை நிறுத்திக்கொண்டு பெண்ணை அவள்

பெற்றோர்களிடத்து அனுப்பிவிட்டான் கோபாலன். அதன் பிறகு நமது வடுகப்பெண்ணைக் கோபாலன் அதி தீவிரமாகக் காதலித்தான்.

கோபாலனைப்பற்றிய மட்டில் இவ்வளவு சொன்னேனே தவிர சகுந்தலாவின் பூர்வ சரிதையைப்பற்றி நான் ஒன்றும் சொல்லத் தயாராகவில்லை. அவர்கள் புருஷன் பெண்சாதியாக வாழத் தலைப்பட்டார்கள்.

கோபாலனும், மிஸஸ். சகுந்தலா கோபாலனும் (Mrs. Sakuntala Gopalan) வந்தபிறகு எங்கள் ஊரில் என்ன மாறுதல் ஏற்பட்டதென்றால் சொல்லுகிறேன் கேளுங்கள். எங்களுக்கே எங்கள் ஊர் வாழ்க்கை பிடிக்கவில்லையென்றால் அவர்களுக்கு எப்படிப் பிடிக்கும்? ஆகையால், கோபாலனும், முக்கியமாக மிஸஸ். கோபாலனும் இன்னும் ஊரிலுள்ள பெரிய உத்தியோகஸ்தர்களும் கூடி ஒரு "கிளப்" நடத்தவேண்டுமென்று ஏற்பாடு செய்தார்கள். அப்படியே ஒரு "கிளப்" ஆரம்பமாயிற்று. டென்னிஸ் ஆட்டம் ஆடுவதற்கும் ஒரு இடம் அமைக்கப்பட்டது. தினம் சாயந்திரம் 5-மணிக்கு அங்கு பொழுதுபோக்குக்காக எல்லாரும் வரத்தலைப்பட்டார்கள். மிஸஸ். கோபாலன் டென்னிஸ் ஆடுவதோடு மட்டுமல்லாமல் மற்றும், சீட்டாட்டம், பிங்பாங் முதலானதுகளிலும் கலந்துகொண்டாள். இப்படியாக அவள், அங்கு கூடும் மற்ற உத்தியோகஸ்தர்களுடன் சர்வசாதாரணமாகப் பழக ஆரம்பித்தாள். அவளுடன் கூடி விளையாடிப் பொழுதுபோக்குவதென்றால் அவர்களுக்கும் அளவற்ற ஆனந்தம்.

நிற்க, அவளுடன் வாழ்வது கோபாலனுக்கு யானையைக் கட்டித் தீனி போடுவதுபோலாயிற்று. சகுந்தலா டென்னிஸ் ஆட்டத்தில் வரவரத் தேர்ச்சிபெற்று வெளியூர்களில் டோர்னமெண்ட்களுக்குச் சென்று "மிக்ஸட் டபிள்ஸ்" ஆடி வெற்றிபெற்றுக் கியாதியடைய ஆரம்பித்தாள். வீட்டிற்கு வந்தால் உடம்பு வலி தீர்த்துக்கொள்ள விஸ்கி, ஒயின், பிராந்தி

முதலிய குடி வகைகள் கோபாலன் வாங்கிக் கொடுக்கவேண்டும். இதுகளெல்லாம் கோபாலனுக்கு அவ்வளவாகத் தேவையில்லாவிட்டாலும் அவளுக்காக வாங்கிக்கொடுத்துத் தானும் அதிகமாக உபயோகிக்க வாரம்பித்தான். இதனால் அவனுடைய சம்பளம் அவன் செலவிற்குப் போதாமல், சுமார் ஒரு வருஷத்திற்குள் அவனுடைய பிதிர்ராஜ்ஜிதமான சுமார் 10,000 ரூபாய் மதிப்புள்ள சொத்தெல்லாம் போய்விட்டது. என்றாலும் சமாளித்துக்கொண்டு சகுந்தலாவை யிழுக்க மனமற்றுக் காலத்தைக் கடத்திவந்தான்.

எங்கள் "கிளப்"பில் மொத்தம் 55 அங்கத்தினர்கள். எல்லோருக்கும் சிறியவனாக 24 வயதுடைய ஒரு ஆண்மகன் இருந்தான். அவன் பெயர் ராம் என்பது. அவனுக்கு ஏதோ கொஞ்சம் சொத்து இருந்தது. அவன் "இன்ட்டர்மீடியட்" பரிக்ஷைக்குப் போயிருந்தான். ஒருதரமல்ல, அரை டஜன் தடவை பரிக்ஷையெழுதியிருக்கிறான். எல்லாத் தடவைகளிலும் பரீக்ஷகர்கள் அவனைப் பரிக்ஷையில் தேறினவனாகக் கொள்ள முடியவில்லை. ஆனால் அவன் தனக்குள் தான் ஒரு பெரிய மேதாவியென்றுதான் நினைத்துக்கொண்டிருந்தான். இவனைப்பற்றி நாம் ஏன் இங்கு சொல்லவேண்டியிருக்கிறதென்றால், நம் கோபாலனின் பிற்கால வாழ்வைச் சீர்படுத்த இத்தகைய ஒருவன் அவசியமாகிறான். தனக்குக் குறைந்தது ஒரு 400 ரூபாயாவது சம்பளமுள்ள உத்தியோகம் ஒன்றைக் கொடுக்காத உலகம், உலகமாகவே தோன்றவில்லை யவனுக்கு. அவன் வேலையில்லாமலிருப்பது அவனுடைய தப்பிதம் அல்லவேயல்ல. அவன் எல்லா ஆபிஸுகளுக்கும் வேலைக்காக விண்ணப்பம் போட்டான். அதனுடன் தான் பிராமணத் தத்துவத்தை அறவே ஒழித்துவிட்டதற்கறிகுறியாகத் தன் பூணூலையும் வைத்தனுப்பிவிட்டான். ஆனாலும் அவனுக்கு வேலையகப்பட்ட பாடில்லை. ஒரு விஷயம் என்னவென்றால் அவன் இதையெல்லாம் மனதில் வைத்துக்கொள்வதில்லை. அவன் ஏழையல்ல.

அவன் வாலிபனுகவும், சந்தோஷகரமான வாழ்க்கையில் ஆழ்ந்தவனுகவுமிருந்தான். அதனுடன் ஒருவிதமான வசீகரத் தன்மையும் பொருந்தியிருந்தான். டென்னிஸ் ஆட்டத்தில் மகா நிபுணனுக விளங்கினுன். அனேக பதக்கங்களும் பெற்றிருந்தான்.

அவனுடைய டென்னிஸ் ஆட்டத்தின் நேர்மை நம்முடைய சகுந்தலாவை அவன்பால் இழுத்தது. அவளும் நல்ல ஆட்டக்காரியல்லவா? அதனுடன் அவன் நல்ல அழகாகவுமிருந்தான். ராம் அவள் வீட்டிற்குப்போய் வந்திருந்துகொண்டிருந்தான்; எதற்காகவென்றுல் டென்னிஸ் ஆட்ட விஷயமாகப் பேசுவதற்காக. "கிளப்" பிலும் அவர்களிருவரும் சேர்ந்தே காணப்பட்டார்கள். அவர்களிருவரும் சிரித்து விளையாடிக்கொண்டு இனிமையாகப் பேசிக்கொள்வதை நாங்கள் ஆச்சரியத்துடன் பார்ப்பதுண்டு. "கிளப்" பில் எல்லோரும் அவனை "தி பாய்" (The Boy) என்று சொல்லுவார்கள். சகுந்தலாவும் "யூ, பாய்" (You, Boy) என்று ஆரம்பித்து அவனுடன் ஆங்கிலத்தில் பேசுவாள்.

நம் கோபாலனுக்கு இது பிடிக்கவில்லை. ஆனுலும் அவள்பால் அவன் காதல் குறையவில்லை. அவளை விட்டொழிக்க அவனுக்குக் கொஞ்சமும் இஷ்டமில்லை. ஆகையினுல் அவனுக்கு "தி பாயின்" மேலும் டென்னிஸின்மேலும் கோபம். இதனுல் கோபாலன் தன் காதலியுடன் கூடிவிளையாடுவதை நிறுத்தினுன். மிஸஸ். கோபாலனே, அதிக உற்சாகத்துடன் "பாயுடன்" கூடி விளையாடினுள். கோபாலன் தன்னுடன் ஆடவரவில்லையென்று மேலுக்காவது ஒரு நாள் அவனிடம் பரிகாசவார்த்தைகள் பேசலானுள்.

மறுநாள் காலையில் கோபாலன் தன் காதலியைக் காணவில்லை. ஒரு கடிதம் எழுதிவைத்துவிட்டு அவள் மறைந்துவிட்டாள். மிஸஸ். கோபாலன், மிஸஸ். ராம் ஆகிவிட்டாள்.

அவள் கடிதம் வருமாறு :—

டியர் கோபாலன்,

நான் உம்முடன் ஏதோ நடுவில் கூடினேன். நடுவில் பிரிந்துவிட்டேன். இதனை மறந்துவிடும். வாழ்க்கையே இவ்வளவுதான்.

இப்படிக்கு,

மிஸஸ். ராம்.

ஐயோ பாவம்! கோபாலன் மோசம்போனான். அவன் அவளைப் பூர்ணமாகக் காதலித்தான். அவளுடைய காதல் நிலைத்திருக்குமென்று நம்பினான். பரபரப்புடன், கோபாலன் "கிளப்" பிற்குவரும் மற்ற பெரிய உத்தியோகஸ்தர்களிடமெல்லாம் விஷயத்தைச் சொன்னான். தன் காதலியின் புதுக் காதலனை அவமானப்படுத்த வேண்டுமென்று எண்ணினான். ஆனால் சட்டந்தான் இடங்கொடுக்கவில்லை. கோபாலன் அடங்காத் துயரத்துள்ளாழ்ந்தான்.

ஊர் பூராவும் இரண்டு மூன்று நாளைக்கு இதே பேச்சாக விருந்தது. "கிளப்" இப்பொழுது ஒழுங்காக நடந்துவருகிறது. அதற்கு நாங்கள் சகுந்தலாவுக்கு எந்நாளும் நன்றியறிவுள்ளவர்களாகவிருப்போம்.

மிஸ்டர் கோபாலனோ இப்பொழுது முழுதும் மாறிவிட்டான். கதர் கட்டிக்கொள்ளுகிறான். நெற்றியில் திருநீறு தரித்துக்கொள்ளுகிறான். காபிகூடச் சாப்பிடுவதில்லையென்று கேள்வி. சாயந்திரங்களில் "கிளப்" பில் பொழுதுபோக்கிய பிறகு வீட்டிற்குச்சென்று அடக்க ஒடுக்கம் நிறைந்த தன் மனைவி கல்யாணியுடன் சந்தோஷமாக இருக்கிறான். கல்யாணி ஒருநாளிரவு, என்ன சமைக்கவேண்டும் என்று கேட்கிறாள். அதற்குக் கோபாலய்யர், வாழைக்காய் பொடித்தூவலும், சாம்பாரும் செய் என்று சொல்லி அன்பின் பெருக்கால் அவள் கன்னத்தில் முத்தம் கொடுக்கிறார்.

S. V. SRINIVASAN,
V Hons.

குழந்தைகள்

[மயில்]

குழந்தைகளைப்பற்றி அநேக கவிகள் தங்கள் காவியங்களில் எழுதியிருக்கிறார்கள். யாழினிதோ, குழலினிதோ, அல்லது குழந்தைகளின் மழலைதான் இவ்விரண்டையும்விடச் சிறந்ததோ என்று ஐயுற்று வியப்படைகிறார்கள். இன்னும் சிலர் குழந்தைப் பிராயம்தான், மனிதன் வாழ்நாட்களில் சிறந்த பாகமென்றும், குழந்தைகள்தான் தெய்வங்களுக்குச் சமானமென்றும், சொல்லி, "குழந்தை-வழிபாடு" என்று சொல்லத்தக்க ஒரு ஏற்பாட்டையும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இதை நான் சொல்லப்போய்த்தான், அன்று என் அண்டைவீட்டுக்காரர், குசேலராயரிடத்தில் எக்கச்சக்கமாக அகப்பட்டுக்கொண்டேன். "போய்யா போ! வேலையெப்பாரு போ! 'கவிகளாம்' கபிகள்! ரொம்ப கண்டுட்டாங்களா இல்லையா. கொழந்தெகளெப்பத்தி! கர்மங்கள்! பிராரப்த கர்மங்கள், கொழந்தெகளாம் இதுகள், ஜன்மாந்திரிய பாபங் கள்".—இந்த அழகிய சொற்றொடர்களெல்லாம், தம் திரு வயிற்றில் உதித்த புத்திர சிகாமணிகளுக்கும், புத்திரிகளுக்கும், பிரயோகித்த அடைமொழிகள்—"இதுகளை கொழந்தெ களுன்னு சொல்றது. 'கோட்டான்கள்' என்று சொல்லவேண் டும். அந்தக்கடவுள், பிரம்மா, சிருஷ்டிக்கும்போது, ஒண்ணு மறந்துபோயிட்டாள். அந்த வாலுதான் பாக்கி. அதெப் பாருங்களேன்; அந்த ஹனுமனெ. நல்ல பேருதான் அமெஞ் சிருக்கு அவனுக்கு. வீட்டிலெ ஒரு தேங்காமூடி பாக்கிவிடற தில்லெ. அவன் அம்மா எங்கேயோ, கச்சட்டியிலே ஒளிச்சு வெச்சிருந்ததெ, திருடிண்டு வந்திருக்கான். இப்பொ பிராது வரும் உள்ளெயிருந்து. இது யாராலெ தீர்ப்பு சொல்றதுக்கு முடியறது, இந்த கேஸிலே; நீங்கோ என்னன்னு, என்னென் னமோ சொல்றேயள் கொழந்தெகள் 'சாமியாம்' 'பூதமா மூன்று" என்று மூச்சுவிடாமல், சரமாரியாய்ப் பொழிந்தார்.

என்ன செய்வதென்று தெரியாமல், சிறிது நேரம், பேந்தப் பேந்த விழித்துவிட்டு பிறகு ஏதோ வேலை யிருக்கிறதென்று சொல்லிக்கொண்டு கம்பி நீட்டினேன், "தப்பிச்சுதே, தம்புரான் புண்ணியமென்று".

கவிகள் கூற்றைவிட குசேலராயர் சொல்வது வாஸ்தவமென்று அநேகர் ஆமோதிப்பார்கள். நாம் சாதாரணமாக வீடுகளில் பார்க்கும் குழந்தைகள், தங்கப்பதுமைகளும் அல்ல, தெய்வங்களும் அல்ல. யாராவது பெரியமனிதர்கள் வரும் பொழுது, வீட்டில் அவைகள் சத்தம், இரைச்சல் ஒன்றும் போடாமல் சும்மா இருக்கவேண்டுமே என்று நாம் படும் பாடு, தெய்வத்துக்குத்தான் தெரியும். நல்ல சுத்தமான சட்டை போட்டு, தலையை வாரிவிட்டு என்னதான் செய்திருந்தாலும், விருந்தாளிகள் வரும் சமயம்பார்த்து, அவைகள் தலையை கலைத்துக்கொண்டு, சட்டையின்மேல் தண்ணீரோ, அல்லது கவனியாமல் எங்கேயாவது வைத்திருந்த எண்ணெயையோ கொட்டிக்கொண்டு, பெரிய பாத்திரமொன்றில், என்ன இருந்தாலும் அதை குடிக்கும்பொருட்டு, தூக்காமல் தூக்கி வாயில் கவிழ்த்துக்கொண்டு, "அம்மா! அம்மா!" என்று வெளியேவந்து அழத்தொடங்கும். அப்பொழுதுதான் இன்னுமிரண்டு குழந்தைகள் அடுப்பங்கரையில் செய்து வைத்திருக்கும் அப்பளாம் வடாத்திற்கு அடித்துக்கொண்டிருக்கும். அவர்கள் மேளம் வாசிக்காமலிருக்கும்படி செய்வது பிரம்மபிரயத்தனமாயிருக்கும். விருந்து கிருந்து ஒன்றும்வரவேண்டாம் வீட்டிற்கு என்றுகூடத் தோன்றும். நீங்கள் சிரமப்பட்டு, உங்கள் குழந்தையை சிங்காரித்து கொஞ்சநேரம் வீதிக்கு விடுங்கள். ஆனையைப்போல் தன் கையால்தானே ரோட்டில் வீணாகப் போகும் புழுதியையெல்லாம் அள்ளித் தலையில் போட்டுக்கொண்டு, அது போதாதென்று, அப்பொழுதுதான் வண்ணானிடமிருந்து வந்த சட்டைகளுள் வெள்ளையாயிருப்பதாய்ப் பார்த்து போட்டனுப்பிய சட்டையுடன் அந்தப் புழுதியிலேயே கோவிந்தா கோவிந்தாவென்று புரண்டு, கண்ணிலும், மண்ணி

லும், மண்ணாக்கிக்கொண்டு கதறிக்கொண்டு வெகு ஊக்கத்துடன் ‘விகடனுக்கு’ கட்டுரை எழுதும் தங்கள் முன்வந்து நின்று, தங்கள் பொறுமையைப் பரீக்ஷிக்கும்.

ஆஹா! அப்பொழுதுதான் அதன் அமிழ்தினுமினிய மழலைச்சொற்களைக்கேட்டு ஆனந்திக்கவேண்டும். அப்படியே எடுத்து மார்போடணைத்து, முத்தமிட்டு, மனமகிழவேண்டும். எந்தக்கவி தானாகட்டும், இப்பேர்ப்பட்ட சமயத்தில், அவன் எழுதிய பாட்டுக்களின் உண்மையை பரீக்ஷித்துப்பார்க்கட்டும்! அவன் முன்பு எழுதியதை எடுத்து குப்பைத் தொட்டியில் போடாவிட்டால், அவன் அவனன்று!

குழந்தைகளுக்கு வார்த்தைகள் வருமுன்பு, அவைகள் ‘ஊ! ஊ!’ ‘தூ, தூ!’ என்று எதைப்பார்த்தாலும் சொல்லி, உங்களைப்படுத்தும்பாடும். பிறகு கொஞ்சம் பேசத் தெரிந்த பின்பு, அது ‘அப்பா! அம்மா! பாப்பா! ஆபூ! பீபீ’ என்று சொல்லி உங்களை வேறொன்றும் கேட்கமாட்டாமல் செய்யும் விதமும், வீணாகானம், தேவகானம் எல்லாவற்றையும் தோற்கடிக்கும். இன்னும் கொஞ்சம் வயதானபிறகு அது கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லவேண்டியிருத்தலும், அதனுடன் அர்த்த ஜாமத்தில் எழுந்திருந்து, கதை சொல்லவேண்டியிருத்தலும், நினைத்துக்கொண்டாலே, ஆனந்தமயமாயிருக்கிறது! எனது நண்பர் குசேலராயரைப்போல், “ஐயோ! தெய்வமே! இந்த ஜன்மத்தில்தான் இவ்வாறு ஆயிற்று. அடுத்த ஜன்மத்திலாவது, எனக்கு இந்த பாழுங் குழந்தைகளில்லாமல் பார்த்துக்கொள். போதும்! போதும்! ராம! ராம!” என்று காதை அடைத்துக்கொள்ளவேண்டியதே. அப்பொழுது தான் அவை நான்கைந்து சேர்ந்துகொண்டு ‘காம்போதி’ ராகம் இழுக்க ஆரம்பிக்கும். அந்த சுகம் பொறுக்கமுடியாமல் நமக்கு அப்பொழுது ஓட்டமெடுக்கத்தான் மனதில் தோன்றும்.

ஸி. ஆர். மயிலேறு, எம். எ.,
அண்ணாமலைநகர்.

எறும்புகளும், பொதுவுடைமை வாழ்க்கையும்

கோடைக்கால விடுமுறை நாட்களுள் ஒருநாள் மாலை இயற்கையின் எழிலைக்காணும்பொருட்டு, கண்டோர் கண்களையும் உள்ளத்தையும் ஒருங்கே கவர்கின்ற கொள்ளிடக்கரைக்கு யான் உலாவச் சென்றேன். கொழுத்த மரங்களடர்ந்ததோரிடத்தில் உட்கார்ந்து மேற்றிசை வானவெளியை உற்றுநோக்கினேன். உலகத்தாரிடமிருந்து யாதொரு பயனும் எதிர்பாராமல், தனது கடமையை மாத்திரம் நிறைவேற்றிவிட்டு ஓய்வு எடுத்துக்கொள்ளப்போகின்ற சூரியனைக் கண்டேன். இந்திய நாகரீகத்தின் அரியபெரிய தத்துவங்களைத் தன்னுள்ளடக்கிக்கொண்டிருக்கிற பகவத்கீதையில் பகவான் கூறும் நிஷ்காமிய கர்மயோகிகளில் சூரியனுமொருவன் என்று உணர்ந்தேன். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று சைவசமயாசாரிகள் நால்வரில் ஒருவர் கூறியதை ஆதித்தன் பொன்னேபோல் போற்றுவதாக அறிந்தேன். இங்ஙனம் யான் யோசித்துக்கொண்டிருக்கையில் ஏதோ ஒன்று என்னைக் கடிப்பதாக உணர்ந்தேன்; சுற்றுமுற்றும் பார்த்தேன். என்னெதிரில் பெரியதோர் கட்டெறும்பைக் கண்டேன். என்னைக் கடித்தது அக்கட்டெறும்புதான் என்று ஐயமறத் தெரிந்துகொண்டேன். எனக்கு எறும்புகள் பாஷை தெரியுமாதலால், நான் அந்த எறும்பை நோக்கி, "எறும்பே, எறும்பே! நீ எதற்காக என்னைக் கடித்தாய்?" என்று கேட்டேன்.

அதற்கு அந்த எறும்பு என்னை நோக்கி, "அற்ப மனிதா! எங்கள் குலத்தாரை மிதித்து அழிக்கின்ற மானிட வர்க்கத்தைச் சேர்ந்தவனே! எங்கள் மகாநாட்டில் (Conference) நிறைவேற்றப்படும் தீர்மானங்களைத் திருட்டுத்தனமாக அறிந்துபோவதற்காக வந்த வேவுகாரனோ நீ? எங்கள் மகாநாடு நடக்குமிடத்திற்கு நீ ஏன் வந்தாய்? அதனாலன்றோ நான் உன்னைக் கடித்தேன். இவ்விடத்தைவிட்டு விரைவில் செல்லுகின்றாயா,

இல்லாவிடில் நாங்களெல்லாம் படைதிரட்டி வரவா?" என்று கேட்டது.

எறும்புகள் படைதிரட்டி வந்துவிட்டால், எனது பாடு ஆபத்துதான் என்று பயந்து அவ்விடத்தைவிட்டகன்றேன். "எறும்புகள்கூடவா மகாநாடு கூட்டுகின்றன! இஃதென்ன விந்தை! இருபதாம் நூற்றாண்டே மகாநாடுகள் நூற்றாண்டு போலும்! எறும்புகள் மகாநாட்டில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள்தான் எப்படியிருக்குமென்று அறிவோமே!" என்று நினைத்தேன். முனிவரொருவர் எனக்குக் கற்பித்துக் கொடுத்திருந்த கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தை எனது நினைவிற்கு வந்தது. உடனே நான் எறும்பு உருவெடுத்து அம்மகாநாடு நடக்குமிடத்திற்குப் போனேன்.

மகாநாட்டிற்கு வந்தவர்களெல்லாம் தங்கள் தங்கள் இருக்கையில் அமர்ந்திருந்தனர். ஒவ்வொருவர் முகத்திலும் சந்தோஷமும் ஆனந்தமும் தாண்டவமாடிற்று. அவர்கள் அணி அணியாக உட்கார்ந்திருந்தது கண்களுக்கோர் விருந்து அளித்தது. மகாநாட்டு வரவேற்புக் கமிட்டித் தலைவர் உயர்திருவாளர் வெறி எறும்பார் தனது இருக்கையைவிட்டெழுந்தார். மகாநாட்டிற்கு வந்திருந்த பிரதிநிதிகளெல்லாம் தங்கள் கால்களைப் பூமியிலடித்துத் தங்களது சந்தோஷத்தை அறிவித்தன.

வரவேற்பு கமிட்டித் தலைவர் திருவாளர் வெறி எறும்பார் மகாநாட்டிற்கு விஜயம் செய்துள்ளவர்களை நோக்கி, "சகோதரிகளே, சகோதரர்களே! இம்மகாநாடு கூட்டியதின் நோக்கத்தைப்பற்றி நீவிர் அறிந்திருப்பீர்களென்று நம்புகிறேன். மனிதர்கள் நம்மை அற்பர்களென்றும், அறிவிலிகளென்றும், நம்மிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டியது ஒன்றுமில்லையென்றும் நினைக்கின்றனர். தங்களுக்குத்தான் பகுத்தறிவுண்டாம்; மற்றவர்களுக்கில்லையாம்! அங்ஙனம் அவர்கள் நினைப்பது தவறு என்று உலகத்தாருக்கு அறிவிப்பதுதான் இம்மகாநாடு கூட்டியதின் நோக்கமாகும். மனிதர்களைவிட நாம் எவ்வெவ்வகையில்

உயர்ந்தவர்கள் என்று காட்டவேண்டியது நமது கடமையாகும். 'பெரியோரெல்லாம் பெரியருமல்லர், சிறியோரெல்லாம் சிறியருமல்லர்' என்று அவர்களிலொருவர் எழுதிவைத்துவிட்டுப் போனது தெரியவில்லைபோலும்! எமது வரவேற்புக்கிணங்கி இங்கு விஜயம் செய்துள்ள யாவருக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன். பிரதிநிதிகளுக்கு யாதொரு அசௌகரியமும் நேரிடாமல் இருக்கவேண்டுமென்று நாங்கள் எங்களாலானவற்றைச் செய்தோம். அப்படி அசௌகரியம் ஏதாவது ஏற்பட்டிருந்தால், எங்களை மன்னிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று கூறி ஆசனத்திலமர்ந்தார்.

பிறகு உயர்திருவாளர் பிள்ளையார் எறும்பார் மகாநாட்டுத் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மிஸ்டர் பிள்ளையார் எறும்பார் பிரதிநிதிகளைப்பார்த்து, "சகோதரிகளே, சகோதரர்களே! என்னை மகாநாட்டுத் தலைவராகத் தேர்ந்தெடுத்தமைக்கு உங்களுக்கு எனது மனமார்ந்த வந்தனத்தைச் சமர்ப்பிக்கிறேன். மகாநாடு கூட்டியதின் நோக்கத்தை நாம் எல்லாம் வரவேற்புக் கமிட்டித்தலைவர் உயர்திருவாளர் வெறி எறும்பார் வாயிலாக அறிந்தோம். மனிதர்களை விட நாம் பல வழிகளில் உயர்ந்தவர்கள். நமது வாழ்க்கையிலிருந்து மனிதன் எவ்வளவோ அறிந்துகொள்ளவேண்டியிருக்கிறது. பொதுவுடைமை வாழ்வு ஏற்படுத்தவேண்டுமென்று மனிதர்களிற் சிலர் கிளர்ச்சி செய்கின்றனர்; ஆனால் நாம் உலகந் தோன்றிய நாள்முதலாய்ப் பொதுவுடமை வாழ்வை (Communism) ப்பின்பற்றி வாழ்கிறோம். இருபதாம் நூற்றாண்டில் மனிதன் செய்ய நினைத்திருக்கிற காரியத்தை, நாம், ஆதிமனிதர்களாகிய ஆதாம் (Adam) ஏவாள் (Eve) என்பவர்கள் ஏதேன் தோட்டத்திலிருந்து (Garden of Eden) பூமிக்குத் தள்ளப்படுவதற்கு முன்பே செய்துவிட்டோம். அன்றுமுதல் இன்று வரை பொதுவுடைமை வாழ்வைப் பின்பற்றுகிறோம். நமது வாழ்க்கையைப்பற்றி உயர்திருவாளர் சிகப்பு எறும்பார் ஒரு சொற்பொழிவு நிகழ்த்துவார். அவரது இனியபேச்சைக் கேட்க

வேண்டுமென்று வெகு ஆவலாய்க் காத்துக்கொண்டிருக்கிற உங்களை எனது வெற்றுரைகளால் புண்படுத்துவது நியாயமன்று. எனவே நமது நண்பர் உயர்திருவாளர் சிகப்பு எறும்பாரை விரிவுரை நிகழ்த்தும்படி வணக்கமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று கூறி இருக்கையிலமர்ந்தார்.

பிறகு மிஸ்டர் சிகப்பு எறும்பார் தனது இடத்திலிருந்து எழுந்து மேடைக்குச் சென்று தனது சொற்பொழிவை நிகழ்த்த ஆரம்பித்தார். அவர் அங்குள்ளவர்களைப் பார்த்து, "சீமான்களே, சீமாட்டிகளே! இந்த மகாநாட்டில் பேசும்படி என்னைக் கேட்டுக்கொண்ட உங்கள் யாவருக்கும் எனது வந்தனம் உரியதாகுக. நான இன்றைக்கு 'எறும்புகளும், பொதுவுடைமை வாழ்க்கையும்' என்ற பொருள்பற்றிப் பேசலாமென்று நினைத்திருக்கிறேன். எனது பேச்சை அரசாங்கத்தாருக்கு அறிவிக்க எந்த ஸி. ஐ. டி.-யும் வந்திருக்கமாட்டான் என்று நம்புகிறேன். ஆகவே நான் தைரியமாய் எனது சொற்பொழிவை நிகழ்த்தலாமென்று நம்புகிறேன்.

"நண்பர்களே! பொதுவுடைமை வாழ்வுதான் உலகத்தின் பல பிரச்சினைகளைத் தீர்த்துவைக்குமென்று தற்கால மனிதர்களில் சிலர் நினைக்கின்றனர். பொதுவுடைமை வாழ்வு என்றால் என்ன? அதனால் ஏற்படும் நன்மைகள் யாவை? நாம் எவ்வளவு தூரம் பொதுவுடைமைக்காரர்கள் என்று ஆராய்வோம்.

"சகோதர சகோதரிகளே! எல்லா செல்வத்தையும்—குழந்தைகள் பெண்கள்கூட—பொதுவாக்கவேண்டுமென்பதுதான் பொதுவுடைமையின் கொள்கை. பொதுவுடைமை வாழ்க்கையில் தனி மனிதனுக்கு (Individual) சொத்துரிமை கிடையாது. எல்லா செல்வங்களையும் நாட்டின் மக்கள் யாவரும் சமமாக அனுபவிக்கவேண்டுமென்பதுதான் பொதுவுடைமையின் உயர்ந்த தத்துவம். நமக்குள் எவருக்கும் தனியே சொத்துரிமை கிடையாது. நாம் சம்பாதிக்கின்ற பொருள்களையெல்லாம், நாம் எல்லாரும் சமமாக அனுபவிக்கிறோம். எனக்குப்

பிறக்கும் குழந்தை எனதல்ல; அது நமது சமூகத்திலுள்ள யாவருக்கும் பொதுவானது. பொதுவுடைமை வாழ்க்கையில் எல்லாரும் சேர்ந்து பொருள் உற்பத்தி செய்யவேண்டும். சோம்பேறிகளாய் வாழவேண்டுமென்று நினைப்பவர்கள், பொதுவுடைமை வாழ்வில் இருக்கமுடியாது. எறும்புகளாகிய நாம் பொருள் தேடுவதற்கு ஒன்றாகவே போகிறோம்; கொண்டு வந்த பொருளை ஒன்றாகவே உண்ணுகிறோம். நமக்குள் சோம்பேறிகளே கிடையாது.

" ஆனால் தனியுடைமை வாழ்வை (Individualism) நடத்துகின்ற மனிதனை எடுத்துக்கொள்ளுங்கள். மனிதர்களுள் ஒற்றுமை கிடையாது. வெள்ளை நிறத்தினர் கறுப்பு நிறத்தினரைக் கொள்ளையடிக்கப் பார்க்கின்றனர். முதலாளிகள் தொழிலாளர்களை மனிதர்களாகவே நினைப்பதில்லை. மனித சமூகத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் அடிமை வாழ்வை நடத்துகின்றனர். அவர்களில் நூற்றுக்கு எண்பது பேர் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க இல்லமின்றித் தவிக்கின்றனர். ஏராளமான சொத்துக்களையுடைய முதலாளிகள் யாதொரு வேலையும் செய்யாமல், காலத்தைக் கூத்து நாட்டியம் முதலிய களியாட்டங்களில் கழிக்கின்றனர். அவர்களால் உலக முன்னேற்றத்திற்கு நன்மையொன்றும் கிடையாது. அப்படியிருந்தும் அவர்கள்தான் சுகபோகங்களை அனுபவிக்கின்றனர். நெற்றியின் வியர்வை நிலத்தில்விழப் பாடுபடும் தொழிலாளிகள் ஒரு நாள் உணவிற்கும் வழியின்றி, பட்டினி கிடக்கின்றனர். முதலாளிகளின் சுகபோகங்களைத் தேடிக்கொடுப்பவர்கள் தொழிலாளிகள்தான், ஆனால் அத்தொழிலாளிகளுக்கு அப்போகங்களில் ஆயிரத்திலொரு பங்குகூடக் கிடையாது. உலக முன்னேற்றத்திற்குப் பொருளாதாரத் துறையில் பாடுபடுகின்ற தொழிலாளி கஷ்டப்படுவதும், யாதொரு தொழிலும் செய்யாமல் உண்டு உறங்குகிற முதலாளி சுகப்படுவதும் தர்மமா? நியாயமா? இக்கால மனிதன் அதை நியாயமென்று சொல்லலாம்; ஆனால் உலகத்தில் அதர்மம் அநீதி இவையெல்லாம்

நெடுநாள் நிலைத்திருக்காது. இந்த அநீதியை நீக்கவேண்டுமென்று உலகத்தில் தோன்றிய புத்திமான்கள் பாடுபட்டனர், பாடுபடுகின்றனர், பாடுபடுவார்கள். உலகத்தின் அறிவுவளர்ச்சித் துறையில் இன்றுவரையிலும் தனக்கு நிகருள்ளவர் எவருங் கிடையாது என்ற கியாதிபெற்ற பிளேடோ என்ற கிரேக்க தேசத்துத் தத்துவசாஸ்திரி தானெழுதிய "குடியரசு", "சட்டங்கள்" என்ற நூல்களிற் பொதுவுடைமை வாழ்க்கையின் கொள்கைகளை வரையறுத்திருக்கிறார். லய்கர்கஸ் என்ற மற்றொரு கிரேக்க நாட்டினரும் அங்ஙனமே செய்திருக்கிறார். பாரத நாட்டிலும் பொதுவுடைமையின் கொள்கைகள் பரவிவருகின்றன. பாமரர் உள்ளத்தையும் பாவலர் உள்ளத்தையும் ஒருங்கே பரவசப்படுத்துகிற பாக்களைப் பாடிய பாவலர் பாரதியார், "மனிதருணவை மனிதர் பறிக்கும் வழக்கம் இனியுண்டோ?" என்றும், "தனிமனிதனுக்கு உணவில்லையெனில், சகத்தினையழித்திடுவோம்" என்றும், "உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் களித்துண்டு வாழ்வாரை நிந்தனை செய்வோம்" என்றும் கூறிப்போந்தார்.

"ஆனால் மனிதன் இதுவரையிலும் பொதுவுடைமை வாழ்வைப் பூரணமாய் நிறுவினதாகத் தோன்றவில்லை. இப்பொழுதுதான் ருஷியநாட்டில் பொதுவுடைமையின் விதை விதைக்கப்பட்டிருக்கிறது. அது முளைத்து மரமாகி, மலர்ந்து, காய் காய்த்துக் கனிதருவதற்கு முன் அதனை முளையிலேயே கிள்ளிவிடவேண்டுமென்று அரவ நெடுங்கடலாடை அவனி முழுவதிலுமுள்ள பல அரசியல்வாதிகள், அறிவுவளர்ச்சிக்காக அன்றி அற்ப வெகுமதிகளுக்காக நூல்கள் எழுதுகின்ற பொருளாதார நிபுணர்கள், முதலாளிகளின் நன்மையை மாத்திரம் நாடுகின்ற அரசாங்கங்கள், பொதுநலத்தைக் கனவிலும் கருதாத முதலாளிகள் ஆகிய இவர்கள் முயற்சி செய்கின்றனர்; இல்லாவிடில் நகத்தால் கிள்ளுவதுபோய், கோடரி கொண்டு வெட்டவேண்டிவருமாம். "பொதுவுடைமை" என்ற வார்த்தையையே அகராதியிலிருந்து எடுத்துவிடவேண்டு

மென்று அவர்கள் சூழ்ச்சி செய்கின்றனர். பொதுவுடைமை என்ற குழந்தையை இளமையிலேயே கொல்லாவிடில், அது வளர்ந்து அவர்களையே கொன்றுவிடுமென்று அஞ்சுகின்றனர். தன் பெயரை உச்சரிக்க மறுத்ததற்காக எப்படி இரணியன் என்ற அரக்கன் தன் புதல்வன் பிரஹலாதனைக் கொடுந்தண்டனைக்குள்ளாக்குவித்தானே, அங்ஙனமே முதலாளித்துவம் (Capitalism) என்ற இரணியன் தன் பெயரை உச்சரிக்க மறுக்கிற தொழிலாளர்களின் தலைவர்களாம் பிரஹலாதர்களைத் தண்டிக்கிறான். அதற்காகவே பத்திரிகை சுதந்தரத்தையும் (Liberty of the Press) பறிக்க எண்ணுகிறான். பொதுவுடைமையாம் நரசிம்மன் என்று உதிப்பானே யாரே சொல்ல வல்லார்! பொதுவுடைமை வாழ்க்கையை ஏற்படுத்த மனிதர்கள் அஞ்சுகின்றனர்.

“ஆனால் எறும்புகளாகிய நாம், மனிதர்களால் அற்பர்களென்று அழைக்கப்படும் நாம், பொதுவுடைமை வாழ்வைப் பண்டைநாள் தொட்டே பின்பற்றுகிறோம். அப்படி நாம் பின்பற்றுவதினால் நமக்கு ஏற்பட்ட நன்மைகளையும், அப்படிப் பின்பற்றாததினால் மனிதனுக்கு ஏற்பட்ட தீமைகளையும் ஆராய்வோம்.

“நாம் ஒவ்வொருவரும் மற்றவர்களைச் சமமாகப் பாவிக்கிறோம். நமது உலகத்தில் ஆணும், பெண்ணும் நிகர். வறுமை என்ற வார்த்தையே நமது நாட்டு அகராதியில் கிடையாது. சோம்பல் வாழ்க்கையே நம்மவர்களுக்கு இல்லை. எல்லாரும் ஒன்றுசேர்ந்து உழைக்கிறோம். தன்னலம் மறந்த தவயோகிகள் நாம். நமது நாட்டில் கொலை, களவு, பொய், பித்தலாட்டம், பொறாமை, விபசாரம், காக்காய் பிடித்தல் இவைகள் கிடையா. பொன்னையும் மண்ணாக நினைக்கும் துறவிகள் நாம். நமது உலகத்தில் முடியரசோ (Monarchy) ஜனநாயகமோ (Democracy), குடியரசோ (Republic) கிடையாது. ஆள்வோர், ஆளப்படுவோர் என்ற வேற்றுமை கிடையாது. எனவே நாம்

தான் பூரண சமத்துவத்தை (Equality) அனுபவிக்கிறோம். பொருளாதார சமத்துவம் (Economic Equality) நாம் பெற்றிருப்பதால், சமூக சமத்துவ (Social Equality) த்தையும் அடைந்துவிட்டோம். நமது கலியாணங்களில் அற்பப்பண தேவதைக்காகப் பெண்கள் பலியிடப்படுவதில்லை. நமது கலியாணங்களில் காமதேவன் தான் ஆட்சிபுரிகிறான். வறுமையும், பொருளாதார பேதமும் நமது நாட்டில் இல்லையாதலால், நமது நாட்டை அமரர் நாட்டிற்கு ஒப்பிடலாம். "சர்வம் விஷ்ணுமயம் ஜகத்" என்ற வாக்கியத்தின்படி நமது நாட்டில் ஒவ்வொருவரும் விஷ்ணுவாகவே விளங்குகிறோம். இவை யாவற்றிற்கும் காரணம் நமது பொதுவுடைமை வாழ்வன்றோ!"

"நமது வாழ்க்கைக்கும், மனிதர் வாழ்க்கைக்குமுள்ள வேற்றுமை மலைக்கும் மடுவிற்குமுள்ளது போலத்தான். மனிதருலகத்தில் வறுமை தாண்டவமாடுகிறது. சொத்துரிமையுடையவர்கள் சோம்பல் வாழ்க்கையை நடத்துகின்றனர். ஒவ்வொருவனும் தன்னலத்தைப் பெரிதாக எண்ணுகிறான். எவன் ஏமாறுவான், எவன் நெற்றியில் பெரியதோர் நாமம் போடலாம், எவன் வயிற்றில் மண்ணைப்போடலாம் என்ற பிரச்சினையே ஒவ்வொரு மனிதனையும் அறிவிழக்கும்படி செய்கிறது. பொருளில்லாத ஏழைகள் பணக்காரர்களை நோக்கிப் பொறாமை அடைகின்றனர்; சில சமயங்களில் பணக்காரரிடமிருந்து பொருளைப்பறிக்கக் கொலையும் களவுஞ் செய்கின்றனர். பணத்திற்காக உடலைவிற்கும் பெண்மணிகளின் தொகை நாளுக்குநாள் அதிகரிக்கிறது. ஒவ்வொரு நாட்டிலும் விபசாரத் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள், வயிறு வளர்ப்பதற்காகத் தான் அத்தகைய மானங்கெட்ட வாழ்க்கையை நடத்துவதாக ஒப்புக்கொள்ளுகின்றனர். எனவே பொருளாதார சமத்துவம் ஏற்பட்டால், பணத்திற்காகக் கற்பைவிற்கும் காரிகைகளின் எண்ணிக்கை குறையும். பணதேவதையைப் பாராட்டுகின்ற மனிதர்கள் நாட்டில் மன்மதனுக்கு வேலையே கிடையாது. கலியாணஞ்செய்துகொள்ளுகிற ஒவ்வொரு ஆடவனும், பெண்

வீட்டாரிடமிருந்து எவ்வளவு கொள்ளையடிக்கமுடியுமோ, அவ்வளவையும் கொள்ளையடிக்கிறான். அறிவு வளர்ச்சியில் முதன்மை இடம் பெற்றுவிட்டதாகத் தங்களை நினைத்துக்கொள்ளுகிற பட்டம்பெற்ற பட்டதாரிகள் (Graduates) தான் இந்த அறிவீனமான செய்கையை அதிகமாக செய்கின்றனர். நண்பர்களே! இவர்கள்தான் உலகத்தை முன்னேற்றப் போகிறார்களாம்!

"மனிதர்களிடத்தில் பொருளாதார சமத்துவம் ஏற்படாததினால், சமூகத்தில் சமத்துவம் ஏற்படவில்லை. எனவே சமூகத்தில் ஒழுங்கும், அமைதியும் ஏற்படுவான்வேண்டி அரசியல்கள் அமைக்கவேண்டியிருக்கிறது. அவர்களின் வாழ்க்கையின் தாழ்விற்குக் காரணம் அவர்களது தனியுடைமை வாழ்க்கை தான். எனவே மனிதர்களைவிடப் பன்மடங்கு உயர்ந்தவைகள் எறும்புகள்தான். இந்த உண்மையை உலகத்தாருக்கு அறிவிக்க வேண்டி, பிரசாரஞ் செய்யவேண்டும்" என்று கூறித் தனது விரிவுரையை முடித்தார்.

தலைவரின் முடிவுரைக்குப் பிறகு மகாநாடு கலைந்தது. அதன் பிறகு ஆடல், பாடல், சிற்றுண்டி விருந்து முதலியன நடந்தன.

எறும்புகளின் பொதுவுடைமையின் உயர்வை அறிந்த யான், என்றும் எறும்பாகவே இருக்கலாமென்று நினைத்தேன். அப்படிச் செய்வது சுயநலமாக முடியுமென்று தோன்றியதால், அவ்வெண்ணத்தை விட்டேன். எறும்புகளின் பொதுவுடைமை வாழ்க்கையைப்பற்றி மனிதர்களுக்கு எடுத்துக்கூறி அவர்களையும் பொதுவுடைமைக்காரர்களாக்கவேண்டியது என் கடமை என்று தோன்றியதால், எறும்புடலை நீத்து மனித உருவத்திற் புகுந்தேன்.

இருள் என்ற கொடியவன் என்னைச் சூழ்ந்துகொண்டமையால், அவன் கையிலிருந்து தப்பும்பொருட்டு, 'பூலோக கைலாயம்' என வழங்கும் சிதம்பரத்தைநோக்கி நடந்தேன். நான்

கண்டவற்றையும் கேட்டவற்றையும் மாணவர் உலகத்திற்கு அறிவிப்பது என் கடமை என்று தோன்றியதால், இக் கட்டுரையை வரைந்தேன். எனது முயற்சியை எந்த அதிகாரப் பீடத்தினரும் தடுக்காதிருக்க வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வழுத்துகிறேன்.

ப. அரங்கநாதன்,
IV Hons. (Econ.)

பஞ்ஞேவேகம்

சிவபுரி என்றோர் அழகிய கிராமம் உண்டு. ஊருக்கருகே காவிரிநதி ஓடியதால் பயிர்பச்சைகளெல்லாம் நன்கு செழித்து வளர்ந்தன. அவ்வூரில் குடிகொண்டு வாழ்ந்தவர்கள் வறுமையென்னும் பிணியையே கேட்டறியாதவர்கள். பெற்றதைக் கொண்டு மனம் களிப்படைந்து ஒற்றுமையோடு வசித்துவந்தனர். அவர்களில் நம் சிவநேசனும் ஒருவன். இளம்பிராயம் முதற்கொண்டே கருணையினிலயமாக விளங்கினான். மணமான பின்பும் இல்லறம் நடத்தி இன்புறவெய்தி, வரும் விருந்தினர் பேணி, இல்லையென்னாது தன்னாலியன்ற அளவும் வழங்கிவந்தான். ஆவ்வூரில் யாவரும் அவனை தருமசீலன், சத்தியவான், பரோபகாரன், ஏழைநேசன், சிவநேயத்தன், காருண்யன் என்று வழங்கிவந்தனர். அவன் மனைவி சுந்தரி ஓர் பதிவிரதா சிரோன்மணி. மாசிலாக் குலத்து வந்தவள். யாவரிடத்தும் நேசமாகப் பேசும் பெற்றி வாய்ந்தவள். கணவனைத்தவிர வேறு தெய்வம் உலகினில் இல்லை என்று எண்ணி, அவன் மனம் கோணாதவாறு ஒழுகிவந்தாள்.

இவ்வாறாக இவர்கள் இன்புற இல்லறம் நடத்திவரும் நாளில், ஆண்டவனதின்னருளால் சூரியனைப் பழிக்கவல்ல ஓர் ஆண்குழந்தை ஆங்கவர்க்குதித்தான். குழந்தை பிறந்த அதிர்ஷ்ட வசத்தால் சிவநேசனுக்கு வேலையில் உயர்வு ஏற்பட்டது. புத்திர பாக்கியத்தாலும் வேலையினால் சம்பள வுயர்வு ஏற்பட்டதாலும், மதுவுண்டு களித்த வண்டு போல மகிழ்ந்த சிவநேசனும் அன்னதானம் செய்து, அவ்வூரில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் சர்வேசுவரனிற்கும், அம்பிகை மங்களேசுவரிக்கும் வெண்தானையிட்டு, சிறப்பாக அபிஷேகமும் செய்துவைத்தான்.

வேலையின் கொடுமையால் மனம் மாறுபட்டு அந்திவேளையில் இல்லம் திரும்பும்போது ‘மழயால் மருட்டும் தீஞ்சொல்

லும், குறுநகைப் பவளவாயும், கமலக் கண்ணும், குண்டலம் நிறைந்த காதும், உடைய குழவியைக் கண்ட அளவிலே, மெய் மறந்து, கங்குலை நீக்கும் கனலியைக் கண்ட வுலகம் உவப்பது போல இறும்பூது எய்தி, வாரியெடுத்து, முத்தமிட்டு, உள்ளே எடுத்துச் செல்வான்.

இத்தகைய சிறப்புடனே சிவநேசன் வாழ்ந்துவரும் நாளில் ஊரில் உள்ளோர் அழுக்காறுகொள்ளவாரம்பித்தார்கள். சிவநேசன் சகல சம்பத்துடன் கவலையில்லாது இன்பக்கடலிலாழ்ந்திருப்பதைக் காண அவர்களின் மனம் பொறுக்கவில்லை. இது உலகத்திலே மனிதர்க்குரிய இயற்கை சுபாவங்களில் தலையாயது! சிவநேசனின் சகோதரர்களிருவர் அவனை வெறுக்க ஆரம்பித்தார்கள். பொறாமையால் தீக்குணமும் அடைந்தனர். இவற்றையெல்லாம் உணராத சிவநேசனும், தன்னாலியன்ற அளவு அவர்களுக்கு உதவிசெய்தும், அவர்களைத் தன்னகத்தே கொண்டு, துயர்களைத் தீர்த்தும் வருவானாயினன். சூதும் வாதும் அறியாத அவன் தன்னைப்போலவே எல்லோரும் சத்தியத்திற்கு உட்பட்டு நடப்பர் என்று எண்ணியிருந்தான். அவர்கள்மேலிருந்த அன்பால் பணம் பூராவும் ஒருவன்பேரில் போட்டான். ஒரு வீடு ஒன்று பக்கத்தூரில் வாங்கி அதைத் தன்னண்ணன் தாஸண்ணபேரில் பதிவுசெய்தான். எல்லோரும் ஒற்றுமையாக இருக்க நினைப்பது அல்லால் வேறொன்றும் அறியான். எக்காரியத்தை எடுத்தபோதிலும் தொடுத்துமுடிக்கும் ஆற்றல் வாய்க்கப்பெற்றவனாயினும் தனது தாஸண்ணவைக் கேளாது ஒன்றும் செய்யான். என்னே சகோதர வாஞ்சை? பரதனுக்குச் சமமாகவே கூறலாம்! ஆனால் நாம் நினைப்பதுபோல் எந்தக்காரியம் நடக்கிறது! எல்லாம் ஆக்கவும் அழிக்கவும் அக்ரமங்களடக்கவும், உயிர்களை ஆட்டவும்வல்ல ஈசனின் செயல்!

சிறிது சிறிதாக, வஞ்சக நெஞ்சம் படைத்த பாதகரிருவரும் ஒருங்கு சேர்ந்து, சிவநேசனிடம் வார்த்தையாடவும் வெறுத்தவர்களாகி, சச்சரவுசெய்ய ஆரம்பித்தார்கள். 'கணவ

னைப்போல் மனைவி' என்றவாறு அவர்களின் மனைவிமார்களும் ஒன்றுக்கும் உதவா தங்கள் தங்கள் கணவரிடம் பொருள் பறிக்குமாறு தூண்டினர். சுந்தரி சகலபோக பாக்கியங்களுடன் வாழ்வது அவர்களை ஆட்பார்த்து உழலும் அருளில் கூற்று வாட்டுவதுபோல் வாட்டியது. அவர்களின் தூண்டுதலாலும், தங்களின் குணத்திற் கேற்பவும் வீட்டையும் பொருளையும் தங்களுக்குரிமையாக்கிக் கொண்டனர்.

சில ஆண்டுகள் கழிந்தன. சிவநேசனின் அருந்தவப்புதல்வனும் அழகன், வாலிபப் பருவம் அடைந்தான். 'தந்தையெப்படி அப்படித் தனயன்' என்றதற்கேற்ப அவன் சகல நூல்களையும் எளிதில் மிகச் சுலபமாகக் கற்றுக்கொண்டான். சிறந்த அறிவு படைத்தவனுனன். தனது தந்தை வேலையில் விருப்பமில்லாது, மனம் உருகி உடல் குழைய என்பெலாம் நெக்குருக வருந்துவதைக்கண்ட குழகன், வதனம் வாட மதியிழந்தவனுகி, நாளுக்குநாள் உடல்மெலிய ஆரம்பித்தான். தந்தைதாய் பணித்தல் செய்யும் தவம் அலால் தவம் மைந்தர்க்கு வேறில்லை என்று நன்கு உணர்ந்த அவன் பெற்றோரைக் காக்கும் தொழில் பூண்டான். நூலறிவு கொண்டு பலவகையில் தேற்றி ஆற்றினுன். தனது தந்தையின் உதவியால் ஒரு சிறிய உத்தியோகமும் பெற்றுன். தனதிரு முதுகுரவர் மனப்படி அநந்தையை என்னும் ஓர் அழகியை மணந்தான். மணம் வேண்டாமென்று மன்றுடியும், தந்தைதாய் வாக்ய பரிபாலனம் புரிதலே பாரதநாட்டில் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய முதற் கடமை என்பதை நன்குணர்ந்தான். இதனுலாவது தந்தையின் மனம் மாறுபடும் என்றிருந்தான். ஆனுல் பயன் யாதும் இல்லை!

சகோதரவாஞ்சை மிகக்கொண்ட சிவநேசன் தனக்கு நேர்ந்த குறையை நினைத்து தீராத மனக்கவலையென்னும் பிணிக்குட்பட்டான். பற்று அற்றுன். மனம்பதறினுன். கடைசியில் குன்மநோய் குடிகொண்டவனுகி வேலையினின்று ரஜா வாங்கிக்கொண்டு வீட்டில் படுத்தான். அவ்வளவுதான்.

காலம் கிட்டவாரம்பித்தது. அழகன் தன் தந்தையைவிட்டு பிரியாது கண்ணினைக் காக்கின்ற இமைபோல் காத்து வந்தான். வைத்தியர் பலரையும் தருவித்து மருந்து பார்த்தான். ஒன்றி லும் குணம் காணோம். மனக்கவலைக்கு மருந்தேது?

இங்ஙனம் நாட்கள்கழிய இறப்பது திண்ணம் என்று உணர்ந்த சிவநேசன், தன் இளம்பிராயத்தில் இருந்த இருக் கையை நினைத்து நெஞ்சம் பதறுவான். எண்ணாத எண்ணம் எல்லாம் எண்ணி நெஞ்சம் புண்ணாகுவான். தான் தாஸண்ணா வோடு, ஆற்றில் நீர் விளையாடியதும், கோலிகளாடியதும், கைக் கோல்கொண்டு பண்டரீநாதம் சென்றதும், இருவரும் என்றும் இணைபிரியாதிருந்து, எதிரிகளைத் தாக்கியதும், இன்னம் பலவும் நினைந்துநினைந்து கண்ணீர் உகுப்பான். ஆஹா, நமக்குத்தான் ஈசன் இக்கதி அளித்தான்! நங் குழந்தைகளாவது சுகமுற வாழவேண்டும் என்று எம்பிரானை வேண்டிக்கொள்வான். ஒருநாள் இப்படியாக நினைந்து வருந்திக்கொண்டு, விழிநீர் கண் ஊற்றென வெதும்பி ஊற்ற, துக்கத்தை ஒருபக்கத்திலிருத்தி, அழகனை அழைத்து இறுதியில் உறுதிபயக்கவல்ல அறமொழி கள் சில கூறுவானாயினன். ‘அப்பா அழகனே’ நான் கூறுவ தால் மனம் வருந்தாதே. உனக்கு அவை பிற்காலத்தில் பயன் படும். வாழ்வாவது மாயம், இது மண்ணாவது திண்ணம். நானிறப்பது நிச்சயம். தந்தைக்குப்பின் தனயனே தந்தையா தலால், உனக்குப்பின் பிறந்த பால்மணம்மாறு பாலகன் கண் ணனைக்காக்கும் கடமை உன்னைச் சார்ந்தது. எனக்குப்பின் உனதன்னையையும் கண்ணனையும் கைவிட்டுவிடாதே. என்னைத் தான் என் அண்ணன் மோசம்செய்துவிட்டான். ஒருதரமாவது இங்கு வந்தானா, காணவும் மனம் நாணுகின்றான். போகட்டும், இனிமேலாவது திருப்தியாக வாழட்டும். ஐயோ! அண்ணா, சிந்தையின் நினைவாகிய செல்வத்திற்கு நான் அழிவில்லை. என் னைப் புறக்கணித்தாயே என்றுதானே கதறுகின்றேன்! ஒரு தரம் என் முகம் நோக்கி கூப்பிட்டால் என் நோய் முழுவதுமே கனலிமுன் பனிபோல் நீங்கிவிடுமே! அப்பா அழகா, செல்வம்

ஒரு பேய். இதை நம்பினோர்க்கெல்லாம் மோசம்தான்! இன்றிருக்கும் நாளைக்குப் போகும். உலகத்தில் ஊரும் சதமல்ல, உற்றார் சதமல்ல, உற்றுப்பெற்ற பேரும் சதமல்ல, யாரும் சதமல்ல. . . . உன் வேலையை நன்றாக கவனித்துக்கொள். வேலைக் கொடுமையில் இருக்கும் வேலையை போக்கடித்துக்கொள்ளாதே. உன் தாயார், பாவம்! ஒன்றும் அறியாப் பேதை. உலகமே தன்னைப்போலிருக்கும் என்று நினைப்பவள். . . தானதருமங்களைச் செய்வதினால் வரும் புண்ணியம் கணக்கிலடங்காதனவாகும். கடவுளைக் குற்றங்குறை கூறி நித்தமும் பேறித்திரியும் கசடர்களுடன் சேர்ந்து உன் வாழ்நாளை வீணாக்காதே. அவர் மகிமையை யாரால் கூறமுடியும்? கடவுளை நம்பினோர் கைவிடப் படார். எனது அண்ணனைப்போல் நீ நடக்காதே. குழந்தை கண்ணனுக்கு-நீதான்-கதி. உன்னை ஒழிய ஒருவரையும். . . ." இதற்குமேல் பேச நா எழவில்லை. இவற்றையெல்லாம் கேட்ட அழகன் கண்களில் நீர் தாரைதாரையாகப் பெருகவாரம்பித்தது. அப்பா! தாங்கள் ஏன் இவ்வாறெல்லாம் கூறுகின்றீர்கள். கடவுள் கிருபையால் எல்லாம் குணமாகிவிடும். இப்பாதகர் கண்ணிலே படாமல் வேறிடம் வந்திடலாம் என்று தேற்றி டாக்டரை அழைக்கச் சென்றான்.

டாக்டரினால் சிவநேசன் உடம்பின் நிலை அறிந்த தாஸண்ணாவிற்கு புத்திவந்தது. உலகம் பழிக்குமென்று ஏங்கவாரம்பித்தான். எவ்வாறு தன் சகோதரனைக் காணுவது, கண்டாலே உயிர்நீத்துவிடுவானே என்று ஏங்கினான். கடைசியில் டாக்டர் மன்றாட, டாக்டருடன் அழகனும் பின்தொடர சிவநேசனைக் காணவந்தான்.

இதை அறிந்த சுந்தரி சிவநேசனைப் பார்த்து 'நாதா, இதோ மைத்துனர் வருகின்றார், இனித் தாங்கள் கவலைகொள்ளவேண்டாம்.' "யாரு தாஸண்ணாவா. தாஸண்ணா தாஸண்ணா"; தாஸண்ணா ஓடோடியும் வந்து 'சிவா இதோ வந்துவிட்டேன், பயப்படாதே. இனி நோய் எல்லாம் பறந்துவிடும்.' அண்ணா என்னைக்காண வந்தாயா! அண்ணா! அண்ணா! . . . உயிர் போய்

விட்டது. சிவநேசனின் ஆத்மா பரகதி பெறுவான்வேண்டி கூட்டை விட்டுவிட்டது!

'அண்ணா நீ ஏன் அண்ணா அழுதுண்டு இருக்கே. மன்னி ஒண்ணுமே பண்ணலையே. பாட்டி ராம ஜெபம் பண்ணின்டு இருக்கா. நீ அழுதா நானும்தான் அழுவேன்.'

'அப்பா கண்ணு, வேண்டாம்! என் மனம் அரை க்ஷணத்தில் உலக முழுவதும் சுற்றிவிட்டது. பழைய நினைவுகள் ஒரு கணப்பொழுதில் கதையாகத் தோன்றி முடிந்தது. வா போகலாம்.

'அண்ணா, அம்மா (மன்னி) எனக்கு ஒரு கதை சொன்னாள். அதிலே சீதை அயோத்திக்கு வந்த பிறகு அசோக வனத்திலே நடந்ததை எல்லாம் மனதில் நினைத்திருந்தாளாம். அதெல்லாம் புத்தகத்தில் பொம்மை பொம்மையாக போட்டிருக்கு. அது மாதிரி நீ எதை அண்ணா நினைத்தே.'

'அப்பா, கண்ணு, நம்ப அப்பாவைப்பற்றி நினைத்தேன். எல்லாம் ஒரு கதையாக முடிந்துவிட்டது. நினைவு எத்தூரம் தெரியுமா சென்றுவிட்டது!"

'நாதா, சாப்பிட நாழிகை ஆய்விட்டது. அம்மா தங்களுக்காகக் கார்த்திருக்கிறார்கள்."

R. V. KAILASAN,
IV B. Sc.

JL
54, 211 A, N32
87
N37-8-1
... ஆவணக்காப்பக ...
12710D
சென்னை-600 008.

காதல் அல்லது சாதல்

திருவாரூரிலே தேரோடும் திருவீதியிலே தியாகராஜ முதலியார் என்பவர் ஒருநாள் மாலை தெருத்திண்ணையில் உட்கார்ந்துகொண்டிருந்தார். அவருக்கண்மையில் அவரது புதல்வன் இராமநாதன் என்பவன் வீற்றிருந்தான். தந்தை மகனை நோக்கி, "இராமநாதா! உன் படிப்பிற்காக நமது சொத்துக்களையும், உன் தாயாரின் நகைகளையும் விற்றேன். உன் தாயார் கழுத்தில் தாலிக்கயிறு தவிர வேறொரு ஆபரணமுங் கிடையாது. நகையில்லாததினால் சமூகத்தார் தன்னை மதிக்கமாட்டார்களென்று அவள் கலியாணம், உற்சவம் முதலிய சுபகாரியங்களுக்குப் போவதில்லையே! இப்பொழுது நமக்கு முக்கால் ஏக்கர் நிலந்தவிர வேறொரு உடைமையுங் கிடையாது. உலகப் பொருளாதார மந்தத்தினால் நெல்லின் விலை மிகவும் குறைந்துவிட்டது. ஒரு கலம் நெல் ஒரு ரூபாய்க்கு விற்றால், முக்கால் ஏக்கர் நிலத்தையுடைய நாம் எவ்வாறு வாழ்வது? மேலும் நமக்கு வரும் வருமானம் நிலவரி கட்டுவதற்கேப்போதாதே. இந்நிலையில் நீ, நான், உன் தாயார், தங்கைகள் இருவர்கள் ஜீவிக்கவேண்டியிருக்கிறது! உன் தங்கைகள் இருவர்களும் பருவமடைந்து இரண்டு வருடங்களுக்கு மேலாகின்றன. அவர்களுக்கு இன்னும் மணமுடித்துவைக்கவில்லையென்று சமூகத்தார் என்னை யிழிவாகப் பேசுகிறார்கள். ஐயோ! யானென்ன செய்வேன்! நீ பீ.ஏ. பட்டம்பெற்று பெரியதோர் உத்தியோகம் வகிப்பாயென்று மனப்பால் குடித்தேன். நீ பட்டம்பெற்று நான்கு வருடங்களாகியும் நாளது வரையிலும் ஒரு வேலையிலும்போய் அமரவில்லை. உனக்கு வயது இருபத்தைந்து ஆவதற்கு இன்னும் ஆறு மாதங்கள்தானிருக்கிறது. அதற்குள் நீ ஏதாவொரு உத்தியோகம் தேடிக்கொள்ள வேண்டும். தம்பீ! என்னால் குடும்ப பாரத்தைத் தாங்க முடியவில்லையே! எனவே நீ சென்னைக்குச்சென்று சொற்ப சம்பளமானாலும் பெற்று ஓர் உத்தியோகத்தில் அமர்ந்தால் நலமாயிருக்கும்" என்று கூறினர். இராமநாதன், "தந்தையே!

வேலைக் கிடைத்தால் நான் போகத்தயார். எவ்வளவோ பொருசு உள்ளவர்களும், பெரிய உத்தியோகஸ்தர்களின் புதல்வர்களும், பணங்கொடுத்து உத்தியோகம் பெறக்கூடிய சக்தியுடையவர்களும் கூட வேலையில்லாத் திண்டாட்டம் என்ற அரக்கனுக்கு ஆளாகவேண்டியிருக்கிறதே! அப்படியிருக்க யான் யாது செய்யவல்லேன்! என்றாலும் தங்கள் வார்த்தையைத் தட்டாமல் சென்னைக்குச் சென்று பார்க்கிறேன்" என்றான். தன் தந்தை தந்த பத்து ரூபாய்களை யெடுத்துக்கொண்டு அன்றிரவே சென்னைக்குப் புறப்பட்டான்.

சென்னைக்கு வந்த இராமநாதன் அங்குள்ள காரியாலயங்கள் ஒவ்வொன்றாய் நுழைந்து ஏதாவதொரு வேலை அகப்படுமாவென்று கேட்டுக்கொண்டே வந்தான். எங்கு சென்றாலும் "வேலைக் காலியில்லை" என்ற பல்லவியே பாடப்பட்டது. இராமநாதன் என்ன செய்வான்! என்ன வேலைக் கிடைத்தாலும் அவன் செய்யத்தயார். பட்டம்பெற்ற தான் அவ்வேலையிலமர்ந்தால் படித்த மற்றவர்கள் ஏளனஞ் செய்வார்களென்பதையும் அவன் பொருட்படுத்தவில்லை.

ஒருநாள் மாலை அவன் மவுண்ட் ரோடு (Mount Road) வழியாக வந்துகொண்டிருந்தான். அவன் கையிலிருந்த பணமெல்லாம் செலவழிந்துவிட்டது. மறுநாளுக்கு வேண்டிய ஆகாரத்திற்கு அவன் கையில் பணங்கிடையாது. ஆயிரக்கணக்கான மக்கள் வாழுகின்ற சென்னைமா நகரிலே இவனுக்கு யார் உதவி செய்யப்போகிறார்கள்! எனவே அவன் வாடிய முகத்துடனும் தொங்கிய கழுத்துடனும் தெருவழியாக நடந்து சென்றான். சென்னைமா நகரின் செயற்கையழகும், மாலை வேளையில் மேற்றிசை வானவெளியில் பகலவன் மறையும்போது உண்டாகும் இயற்கையழகும் அவன் கவலையை எவ்வாறு போக்கும்! இளங்காளையைப்போல் நடவாமல், நத்தை ஊர்ந்து செல்வதுபோல் நடந்துகொண்டிருந்தான். இருபதாம் நூற்றாண்டின் கொடிய அரக்கர்களில் ஒருவனும் மோட்டார்கார் அவன்மேல் மோதிற்று. 'ஐயோ' என்று அலறி நமது நண்

பன் இராமநாதன் கீழே விழுந்தான். 'ஐயோ' என்ற அரவங் கேட்டமாத்திரத்திலேயே, காரினின்று ஒரு மங்கையும் ஒரு பெரியவருங் கீழே குதித்தனர். உடனே அவர்கள் இராமநாதனருகில் சென்று அவனைத் தூக்கி காரிலேற்றிக்கொண்டு ஜெனரல் ஆஸ்பத்திரிக்குச் சென்றனர். அவனுக்குச் செய்யவேண்டிய ஏற்பாடுகள் யாவற்றையும் செய்துவிட்டு, நேராக மாம்பலத்திலுள்ள தங்கள் பங்களாவை அவர்கள் அடைந்தனர்.

ஜெனரல் ஆஸ்பத்திரியில் விடப்பட்ட இராமநாதன் சில நாட்களில் குணமடைந்தான். அவன்மேல் காரை ஏற்றிய மங்கையும், பெரியாரும் தினந்தோறும் இராமநாதனைச் சென்று பார்த்துவிட்டு வருவது வழக்கம். தங்கள் வீட்டில் சில நாட்கள் தங்கியிருக்கும்படி அவர்கள் கேட்டுக்கொண்டதின்பேரில் இராமநாதன் ஒப்புக்கொண்டான்.

இராமநாதன் அவர்களுடன் மாம்பலத்திற்குச் சென்றான். அவர்கள் பங்களாவில் சிலநாட்கள் தங்கினான். அந்நாட்களில் ஒருநாள் மாலை அப்பங்களாவைச் சேர்ந்த பூந்தோட்டத்தில் இராமநாதன் உலாவிக்கொண்டிருந்தான். அப்பொழுது தென்றல் காற்று மெல்லென வீசியது. வான வெளியில் சந்திரன் என்ற அரசன் புறப்பட்டுக்கொண்டிருந்தான். அவனுக்கெதிரில் அவன்மேல் மோட்டாரை ஏற்றிய மங்கை நின்றுகொண்டிருந்தாள். செம்பவளம் போன்ற இதழ்களையும், செந்தாமரை போன்ற முகத்தையுமுடைய அக்காரிகை பதினறு பிராயமுடையவள். அவள் சென்னையிலுள்ள பிரபல இரத்தின வியாபாரி இரத்தின சபாபதி முதலியாரின் புதல்வி. அவள் பெயர் கமலா. அவள் மேரியரிசிக் கலாசாலையில் இண்டர் மீடியேட் வகுப்பில் வாசித்துக்கொண்டிருந்தாள். அவள் இராமநாதனைக்கண்ட நாள் முதலாக அவன்மேல் காதல்கொண்டிருந்தாள். இராமநாதனும் அவள்மேல் காதல்கொண்டிருந்தான். அவர்களிருவரும் வேடிக்கையாகப் பேசிக்கொண்டே அப்பூஞ்சோலையின் மத்தியிலுள்ள மேடையின்மேல் வீற்றிருந்தனர்.

இதை எல்லாம் தூரத்திலிருந்து கவனித்துக்கொண்டே யிருந்த மங்களம் என்ற வேலைக்காரி தன் எஜமானியம்மாளுக்கு பூஞ்சோலையில் நடந்ததையெல்லாம் நவின்றாள். உடனே கமலாவின் தாயார் தன் கணவனிடத்தில் அதை அறிவித்தாள்.

சிறிது நேரங்கழிந்தபிறகு, இராமநாதனும் கமலாவும் தங்கள் தங்கள் அறைக்குச் சென்றனர். கமலா தன்னறையிலிருந்த நாற்காலிமேல் உட்கார்ந்துகொண்டு, "உன்னை மறப்பேனோ மறப்பறியேன்" என்ற இராமலிங்க அடிகளின் திருவருட்பாவைப் பாடிக்கொண்டிருந்தாள். அவளது பெற்றோர்கள் அவள் அறையினுள் நுழைந்தனர். இரத்தின சபாபதி முதலியார் தன் மகள் கமலாவை நோக்கி, "கமலா! நீ ஊர் பேர் தெரியாத ஓர் ஆடவனோடு தனிமையாகப் பேசிக்கொண்டிருந்தது அழகல்ல. நம் சுற்றத்தார் இதையறிந்தால் என்ன சொல்வார்கள்! பெண்ணுக்கு உயர்தர கல்வி அளித்ததினால் வந்ததல்லவா இவ்வழக்கம் என்பார்களே. அதன்பிறகு நான் என் தலையை வெளியில் காட்டமுடியுமா? படித்த உனக்கே எல்லாம் தெரிந்திருக்கவேண்டும்" என்றார். உடனே அப்பெண்மணி, "தந்தையே! உங்களுக்கு அவமானம் வரக்கூடிய வழியில் நான் நடந்துகொள்ளவில்லையே! இராமநாதன்மேல் நான் காதல்கொண்டிருப்பது உண்மையே. ஆனால் உங்கள் அனுமதியின்றி நான் அவரை மணப்பேனோ?" என்றாள்.

இதைக்கேட்ட அவள் தந்தை மிகவும் கோபங்கொண்டார். அவர், "கமலா, என்ன கூறினாய்? நான் எப்பேர்ப்பட்டவன் என்று உனக்குத் தெரியவில்லையா? இராமநாதன் என்பவன் எக்குலமோ? எவ்வூரோ? அவன்மேல் காதல்கொண்டிருப்பதாக சற்றும் நாணமின்றி என் முன்பாகவே உரைக்கின்றாயே. உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்யவா இங்கு வந்தான் அப்பையல்! இதோ அவனைத் துரத்துகிறேன் பார்?" என்று ஆவேசம் வந்தவர்போல இராமநாதன் இருந்த அறைப் பக்கமாக ஓடினார். அதற்குள் இராமநாதன் தன்னறையிலிருந்துகொண்டே, தந்தைக்கும் புதல்விக்கும் நடந்த வாக்குவாதத்

தைக் கேட்டுக்கொண்டிருந்தான். எனவே அவன் கமலாவிற்கு ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு வீட்டைவிட்டகன்றான். பிறகு திருவாரூரை அடைந்தான். இராமநாதன் அறைக்கு ஆவேசமாக ஓடிவந்தவர் அங்கு அவனைக் காணவில்லை. கமலா யாது செய்வது என்று தெரியாமல் தவித்தாள். அங்கிருந்த மேஜையின்மேல் கடிதமொன்று கிடப்பதைக் கண்டாள். உடனே மேஜையினருகில் சென்று அக்கடிதத்தைப் பிரித்துப் பார்த்தாள். அதில் "அன்பே, நாம் இருவரும் மறுமுறை கூடி வாழுங்காலம் இப்பிறப்பில் இல்லை. எனவே என்னை மறந்திடுவாய்" என்று எழுதப்பட்டிருந்தது. கமலா மூர்ச்சையடைந்தாள். பிறகு அவள் பெற்றோர் அவளை எடுத்து அணைத்துக் கொண்டு அவள் மயக்கத்தைப் போக்கினார்கள்.

நாட்கள் பல சென்றன. ஐம்பது வயதடைந்த ஒரு பணக்கார கிழவனுருக்கு நமது கமலாவை மணஞ்செய்து கொடுக்க அவளது பெற்றோர்கள் இசைந்தனர். கலியாணத்திற்காக எல்லா ஏற்பாடுகளையும் செய்தனர். கலியாண நாளும் வந்தது. கலியாண சடங்குகளை நடத்துவதற்காக மணமகளை அழைப்பதற்காக சில பெண்மணிகள் மணமகளின் அறைக்குச் சென்றனர். அங்கு மணமகளைக் காணோம். எனவே மணமகளைத் தேட அங்கு வந்திருந்த யாவரும் புறப்பட்டனர். தன் மகளைத் தேடிக்கொண்டு வருகையில், இரத்தின சபாபதி முதலியார் மேஜையின்மீது இரண்டு கடிதங்களைப் பார்த்தார். அதில் ஒன்று அவருக்கு எழுதப்பட்டிருந்தது; மற்றொன்று இராமநாதனுக்கு எழுதப்பட்டிருந்தது. இராமநாதனுக்கு எழுதிய கடிதத்தைப் பிரித்துப் பார்க்காமல், அதைத் தபாலாபீஸில் போட்டுவிட்டு வரும்படி ஆளிடம் கொடுத்தனுப்பினார். பிறகு தனக்கெழுதிய கடிதத்தைப் பிரித்துப் பார்த்தார். அதில் பின் வருமாறு வரையப்பட்டிருந்தது. "தந்தையே! இன்றோடு எனது இவ்வுலக வாழ்க்கை முடிவடைகின்றது. பணத்திற்காக ஆசைப்பட்டு பழுத்த கிழவனுரை எந்த பதினறு பிராய மங்கையும் விரும்பமாட்டாள் என்பதை தாங்கள் அறிய

வில்லையே! பணம் பெரிதல்ல, பதவி பெரிதல்ல, காதலே பெரிது என்பதை உலகத்தாருக்கு அறிவிக்கவே யான் தற்கொலை செய்துகொள்ளத் துணிந்தேன். தமிழ் நாட்டின் தேசாபிமானத்தைத் தட்டி யெழுப்பிய வீரன் குயிற்பாட்டில் 'காதல், காதல், காதற் போயிற் சாதல் சாதல்' என்றான். அவ்வாக்கியத்தின் உட்பொருளை தமிழ் நாட்டார் யாவரும் அறிய வேண்டும்." இதைப் படித்த தந்தையின் உள்ளம் எப்படியிருக்குமென்று நாம் சொல்லவேண்டியதில்லை. பிறகு தன் புதல்வி எங்கேயாவது குளத்தில் விழுந்திறந்து இருப்பாளென்று ஊகித்துக்கொண்டார். பிறகு அவள் பிரேதத்தைக் கண்டெடுத்து அதற்கு செய்யவேண்டிய ஈமக்கடனைச் செய்து முடித்தார். தனது அருமைப் புதல்வியை இழந்தபிறகு வாழ்வில் வெறுப்படைந்து துறவறம் பூண்டார். கமலாவின் தாயார் தன் மகள் ஏக்கத்தினாலே உயிர் துறந்தாள்.

இராமநாதன் திருவாரூரிலே தனது அறையில் உட்கார்ந்துகொண்டு தானும் தன் காதலியும் கூடிக் குலாவிப்பேசிக்கொண்டிருப்பதாக இன்பகனவு கண்டுகொண்டிருந்தான். அச்சமயம் ஜன்னல் வழியாக இவன் அறையைநோக்கி ஒரு கடிதம் விழுந்தது. அதைப் பிரித்துப்பார்த்தான். உடனே வாய்விட்டு பின்வருமாறு அழ ஆரம்பித்தான். "கமலா, நாம் கண்ட கனவுகள் எங்கே? நாம் கட்டிய மனக்கோட்டைகள் எங்கே? கமலா, என்னைவிட்டா போய்விட்டாய்! இதோ யானும் வந்துவிட்டேன். எனக்கு இன்றையோடு வயது இருபத்தைந்து. நான் பிறந்தது புதன்கிழமை; இறப்பதும் புதன்கிழமையாகவா வரவேண்டும்! இறைவா! என்னை மன்னிப்பாய்" என்று கதறினான். கீழே சாய்ந்தான். உயிர் துறந்தான்.

மறுவுலகில் காதல் தெய்வத்தைக் காணலாமென்றே அவர்களிருவரும் உயிர்துறந்தனர்.

P. RANGANATHAN,
V Hons.

ஓர் தூய, பரிமள, சுகந்த வாழ்க்கை

என் அருமை லக்ஷ்மியைப்பற்றி சொல்வதற்கு அதிகம் ஒன்றும் எனக்குத் தோன்றவில்லை. அவளுடைய க்ஷீணத்திற்கு நான்தான் காரணமென்று எனக்கு நன்றாய்த் தெரியும்; ஆதலால்தான் இந்த இடத்தில் அவளுடைய இனிய தன்மைகளைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

என்னிடம் வந்தபொழுது, அன்றலர்ந்த அழகிய ரோஜாவைப்போலிருந்தாள். நாள்தோறும் தேவையான சமயங்களிலெல்லாம், சற்றும் மனங்கோணாமல், தனது எஜமானுக்கு வேண்டியவையெல்லாம் செய்து, அவன் வாழ்க்கையையே, பரிசுத்தமாக்கி வந்தாள்.

சண்டாளனாகிய நான்! கொஞ்சமும் கவனமின்றி, அவளுடைய உபகாரத்தையெல்லாம் வேண்டியமட்டும் பெற்று, அவளுடைய தேக நலத்தையே கருதாமல் இருந்துவிட்டேன். நாளடைவில், அவள் கொஞ்சம் கொஞ்சமாக, தனது பொலிவையிழந்து தன் மாசற்ற, மாண்புற்ற மலரினுமினிய மேனி சிறிது சிறிதாய் குறைந்து கடைசியில் மிகவும் மெலிந்துபோய்விட்டாள். ஐயோ! அவளது எழில் எங்கேதான் போயிற்று! கண்களைக் கவரும் அவள் வனப்பு, மாயமாய் எவ்வாறு மறைந்தது! இதற்கெல்லாம் காரணம் நானே! ஐயோ! படுபாவி! இப்படியும் நீ செய்வாயா! பாதகா! இனிமேல் அவளை மறுபடியும் அவளது பழைய உருவத்தைப்பெற்று, கண்குளிரக் கண்டு மகிழப்போகிறாயா? ஏது? எனக்குத் தோன்றவில்லை.

இன்று அவள் முன்னிருந்ததில் நூற்றில் ஒரு பங்குகூட இல்லை. அவள் அழகில் ஆயிரத்தில் ஒரு பாகமேனும் இப்பொழுது காணப்படவில்லை. தனது வேலையைச் சரிவர செய்யக்கூட அவளுக்கு சக்தியில்லை. கண்முன்னாலேயே மறைந்து

போய்விடுவாள்போலிருக்கிறது, எந்த நிமிஷமேனும், அவ்வளவு மெலிந்துபோ. . . . . .

கடவுளே! என்னடா இழவு கீழே விழுந்து! . . . . . அடடா! ஜலதாரைக்குள்ளல்லவா போய்விட்டாள்! அடே! யாரடா பையன்! இன்னொரு சோப் கொண்டுவாடா, இன்னும் உடம்பு தேய்த்துக்கொள்ளவில்லை.

ஸி. ஆர். மயிலேறு, எம். எ.,
அண்ணாமலைநகர்.

JL
T4,+4,211A1,N32
N37-8.1

600 008.
127100

Our Exchange List

The Madras Christian College Magazine.

A Government College Miscellany, Mangalore.

The Kumbakonam College Magazine.

The Magazine, St. Thomas' College, Trichur.

St. Joseph's College Magazine, Trichinopoly.

The Madras Law College Magazine.

The National College Magazine, Trichinopoly.

Hindu College Magazine, Masulipatam.

Findlay College Magazine, Mannargudi.

The Hindu Theological High School Magazine, Madras.

Quarterly Journal of the Mythic Society, Bangalore.

K. R. High School Magazine, Muttra-Vasart.

The Zamorin's College Magazine, Calicut.

The Government Brennen College Magazine, Tellicherry.

The Hindustan Review.

The Jaffna College Miscellany.

"The Old College".

Printed by St. Joseph's Industrial School Press, Trichinopoly—1937.

DEAR SIR,

In purchasing your diamonds and investing your well-earned money, a question arises as to how and where to get the best value. It is in the interests of the purchaser to get them direct from a reliable, long established and successful importer, who not only passes full responsibility but also possesses "KAIRASI".

Our advantageous position as DIRECT IMPORTERS OF DIAMONDS FROM EUROPE, on a large scale for strictly *nett cash* prices and moreover, our close and constant touch with Europe Market, due to our Partner, Mr. Nandalal's long stay in Europe enables us to secure the best quality diamonds after a right test at advantageous prices; so much so, it helps us to give our customers the benefit of our advantages.

To cope with the ever-increasing demands, we have always on hand, a large stock of selected stones that we are able to assort lots in even and equal sizes, uniform cutting and colour, thereby providing ample scope for satisfactory selection.

Always concentrating our energy and attention in this line, we conduct our business economically, scientifically and departmentally, having a wide jurisdiction of business; so much so, we secure extensive business on all sides making a grand and great turnover of business, which automatically helps us to reduce the percentage of incidental expenses, thereby enabling us to keep up to our motto "MAXIMUM SALES WITH MINIMUM PROFIT".

Our policy from the outset is designed to ensure complete satisfaction to our patrons. The confidence and trust of many a customer that we have the proud privilege to enjoy to-day is the result of our strict adherence to the moral code of business, our honesty and high integrity, our promptness and punctuality and above all our "KAIRASI".

IT WILL CONVINCE YOU.

The name of "GOPALDAS" backed as it is by experience and success is your bond of assurance.

We confidently look forward to your esteemed patronage.

No. 1,
Chinnakadai Street,
Teppakulam P. O.,
TRICHINOPOLY.

We are, Dear Sir,
Cordially yours,

N. GOPALDAS & Co.,
Direct Importers and
:: Jewellers ::

No. 87,
Big Street,
KUMBAKONAM.